பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 03 வெள்ளிக்கிழமை (15.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 81

# புலிகளை எதிர்கொள்ள உதவுமாறு இந்து சமுத்திர நாடுகளுக்கு அழைப்பு

## புதுடில்லியில் கடற்படைத் தளபதி கரணகொட

புதுடில்லி,பெப்ரவரி15



விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களை இலங்கை எதிர்கொள்வதற்கு இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் ஒத்துழைக்க வேண்டுமென இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரணகொட இந்தியாவில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுடில்லியில் வியாழக்கிழமை ஆரம்பமான இந்து சமுத்திர கடற்படை மாநாட்டில் கலந்துகொண்டுள்ள கடற்படைத் தளபதி, அங்கு செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்த அழைப்பை விடுத்தார்.

சேது சமுத்திரத் திட்டம் இந்திய, இலங்கைக் கடற் பகுதிகளை சிறப்பாகக் கண்காணிக்கவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் உதவும் எனக் குறிப்பிட்டு அத்திட்டத்தையும் அவர் வரவேற்றார்.

விடுதலைப் புலிகள் இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். இந்த அச்சுறுத்தலை தற்போது தடுத்து நிறுத்தா விட்டால் அவர்கள் ஏனைய நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக மாறுவர் - என வசந்த கரணகொட குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளை எதிர்கொள்வதற்கு இந்திய - இலங்கைக் கடற்படைகள் மத்தியிலான ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது எனக் குறிப்பிட்டுள்ள இலங்கைக் கடற்படைத் தளபதி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இந்த ஒத்துழைப்பு மிகவும் பயனுள்ளதாகவும் வெற்றிகரமானதாகவும் அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி குடாநாட்டுக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,பெப்.15

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பின் பணிகளைப் பார்வையிடுவதற்கும், குடாநாட்டின் தற்போதைய கள நிலைவரத்தைக் கண்டறிவதற்குமென அந்த அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி நீல் போணி நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

நேற்றுக் காலை பலாலி வந்தடைந்த அவர் படை அதிகாரிகளிடம் குடாநாட்டு நிலைவரம் குறித்துக் கேட்டறிந்தார்.

யாழ். கோவில் வீதியில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் ஐ.நா. சார்பு அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

பிற்பகலில் வடமராட்சியில் இயங்கும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். (10ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலிச் சம்பவம்: மற்றொருவர் மரணம்

யாழ்ப்பாணம், பெப்.15

திருநெல்வேலி சந்தையடியில் இம்மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர், சிகிச்சை பயனளிக்காத நிலையில் 14 நாள்களின் பின்னர் நேற்று மரணமானார்.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இராசலிங்கம் மதிமாறன் (வயது - 30) என்பவரே நேற்று மரணமானார். இவர் நல்லூர் பிரதேச (10ஆம் பக்கம் பார்க்க)

## எட்டு மெய்க்காவலர்களுடன் ஒரு வாகனம் மனோ கணேசனுக்கு உடன் வழங்கப் பணிப்பு

### மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவு

கொழும்பு,பெப். 15

மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனுக்கு உடனடியாக எட்டு மெய்க்காவலர்களும் அவர்களின் பாவனைக்கு ஒரு வாகனமும் வழங்கும்படி பொலிஸ்மா அதிபருக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவு ஒன்றை வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் கே. சிறிபவன், நீதியரசர் ரோஹினி பெரேரா ஆகியோரைக் கொண்ட ஆயமே நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கக்கோரி மனோ கணேசன் எம்.பி. தாக்கல் செய்த 'ரிட்' மனுவின் மீதே இந்த இடைக்கால உத்தரவு நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது.

"இந்த வழக்கை மேலோட்டமாகப் பார்க்கும்போதே மனுதாரரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பது தெளிவாகத் தோன்றுகின்றது. அத்துடன் அவர் ஓர் அரசியல் கட்சியின் தலைவர். நாடாளுமன்ற உறுப்பினர். ஆகவே பொதுவான விடயங்களை இணைத்துப் பார்க்கும்போது மனுதாரருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியது அவசியம் என நீதிமன்றம் கருதுகின்றது.

"எனவே மனுதாரருக்கு எட்டு மெய்ப்பாதுகாவலர்களும், அவர்களுக்குரிய ஒரு வாகனமும் வழங்கும்படி பொலிஸ் மா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. (10ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண ஆளுநர், இடைக்கால சபை: அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்வு

கொழும்பு, பெப். 15

இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்வைத்திருக்கும் யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ள - வடக்கிற்கான - இடைக்கால நிர்வாக சபையை நிறுவுவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் அரசு, அதேநேரம் வடக்கிற்கான ஆளுநர் ஒருவரை நியமிப்பதற்கும் முயற்சிகள் எடுத்துவருவதாக அறியமுடிகின்றது.

ஆளுநரை நியமிப்பது தொடர்பாகவும் இடைக்காலசபையை நிறுவுவது தொடர்பாகவும் அடுத்தவாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்தாலோசிக்க அரசு முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் கூறியவை வருமாறு:-

தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக (10ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான நிதி உதவியை எந்த நாடும் நிறுத்தவேயில்லை

### அரசாங்கம் முற்றாக மறுக்கிறது

கொழும்பு, பெப்.15

இலங்கை அரசு முன்கொண்டு செல்லும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை மற்றும் சமாதான முன்னெடுப்பு போன்றவை பிழையானவை என்று காரணம் காட்டி சர்வதேச நாடுகள் எதுவும் இலங்கைக்கு வழங்கிவரும் நிதி உதவியில் ஒரு சதத்தையேனும் குறைக்கவில்லை என்று அரசு தெரிவித்துள்ளது.

அரசின் மேற்படி நடவடிக்கைகளை அந்நாடுகள் முழுமையாக ஏற்றுக்கொண்டு நிதி உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றன என்றும் அரசு தெரிவித்துள்ளது. (10ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு விசுவமடுவில் நேற்று விமானக் குண்டுவீச்சு!

கொழும்பு,பெப்.15

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு மற்றும் விசுவமடுவின் ஏழாலை குடியிருப்புப் பகுதிகளின் மீது விமானப்படையினரின் கிபிர் ஜெட் விமானங்கள் நேற்று காலை 10.30 மணியளவில் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் படுகாயமடைந்தனர். இரு வீடுகளும் முற்றாக அழிந்தன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம், வலிகாமம் தெற்கில் உள்ள ஏழாலைப் பகுதியில் இருந்து இடம் (10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் ஊடகவியலாளர் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம்

கொழும்பு, பெப். 15



நாட்டில் தொடர்ச்சியாக ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 'ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக இணைவோம்' என்ற கருப்பொருளில் நேற்றுக் கொழும்பில் ஊடக அடக்குமுறைக்கு எதிரான இயக்கத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று இடம் பெற்றது.

கொழும்பு, கொம்பனி வீதியில் உள்ள 'டிமெல்' பாக்கில் நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் ஒன்றுகூடிய ஊடகவியலாளர்கள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை மேற்கொண்டனர். சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் (10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

## திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


# பரதநாட்டியப் போட்டி - 2008

இப்போட்டி வடமாகாணத்தைச் சேர்ந்த 5 மாவட்டங்களில் உள்ள கலை மன்றங்களுக்கிடையே குழுநிலையினருக்கான போட்டி, தனிநபருக்கான போட்டி என இரு பிரிவுகளில் 3 நிலைகளில் நடத்தப்படும்.

1) பிரதேச மட்டம் 2) மாவட்ட மட்டம் 3) மாகாண மட்டம்

போட்டி நிபந்தனைகள்

1) *குழு நடனம்*
*கீர்த்தனம்* (ஜதி, சுரங்கள் பயன்படுத்தலாம்) 06 பேருக்கு மேற்படாதவாறு 14 தொடக்கம் 18 வயதிற்குட்பட்ட இருபாலாரும் பங்குபற்றலாம். போட்டி நிகழ்வு 10 நிமிடங்களுக்குள் அமையவேண்டும்.
2) *தனி நடனம்,*
*பதம்*
இதில் - 14 தொடக்கம் 18 வயதிற்குட்பட்ட ஆண் அல்லது பெண் பங்கு பற்றலாம். நிகழ்வு 7 நிமிடங்களுக்குள் இடம்பெறவேண்டும்.
3) நேரடிப் பக்க வாத்தியங்களும் பாடல்களுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.
4) பங்குபற்ற விரும்பும் மன்றங்கள் விண்ணப்பங்களை தங்கள் பகுதி கலாசார உத்தியோகத்தர் மூலம் பிரதேச செயலாளரின் சிபார்சுடன் அனுப்பி வைக்கவேண்டும்.
கலாசார உத்தியோகத்தர் மூலம் அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5) பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மன்றங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.
6) விண்ணப்பங்களை அனுப்பிவைக்கப்படவேண்டிய முகவரி:

உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்,
வரோதய நகர், திருகோணமலை.

*விண்ணப்ப முடிவுத் திகதி 29/02/2008*

செயலாளர்,
கல்வி அமைச்சு, வடமாகாணம்.

(சி/551470)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.
கேள்விப்பத்திரங்கள் வழங்கும் காலம் : 22.02.2008 பி.ப 2 மணி வரை.
கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 04.03.2008 பி.ப 2 மணிவரை.
கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதி : 04.032.2008 பி.ப 2.30 மணி

| *வேலையின் விவரம்* | *மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா)* | *மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா)* | *ஆகக் குறைந்த இக்ராட் பதிவுத் தரம்* |
|---|---|---|---|
| 1. கைதடியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை கட்டடங்களில் மரவேலை/உலோகவேலைகள் (அலுமினியம்) பொருத்து வேலைகள். | 40,000.00 | 500.00 | M 8 |
| 2. யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டரங்கில் மட்டப்படுத்தல், மண் நிரப்புதல் வேலைகள். | 20,000.00 | 500.00 | M 8 |

கேள்விப்பத்திரங்களை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் அவர்களிடமிருந்து இக்ராட் பதிவுப் புத்தகத்தையும் பல்கலைக்கழகக் காசாளர் கரும பீடத்தில் மேற்குறிப்பிட்ட தொகையை செலுத்தியதற்கான பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்களை *பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ. இல 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு உரிய காலத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படவேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

14.02.2008. (சி/551474)

# தவறிவிட்டது

பெறுமதியுடைய சிறிய நகைப் பார்சல் ஒன்று யாழ். இந்துக் கல்லூரி சந்திக்கும் ஞானம்ஸ் புடைவைக் கடைக்குமிடையில் நேற்று (14.02.2008) காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,
*18 A, நவீனசந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 5679*

# நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்ல இன Pencher (கட்டை இனம்) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
105, புகையிரத நிலைய வீதி,
*(புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்)*
யாழ்ப்பாணம். தொ.பே 021-222-9863

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி - 2008

தலைவர்:
**திரு.வி.கணேசராசா (அதிபர்)**
காலம்:
**நாளை (16.02.2008) சனிக்கிழமை மு.ப 09.30 மணி**
பிரதம விருந்தினர் ;
**திரு.ம.பற்றிக் டிறஞ்சன்**
(உதவி ஆணையாளர், விவசாய அபிவிருத்தி திணைக்களம், யாழ். மாவட்டம்)
பரிசில் வழங்கல் :
**திருமதி தர்சினி பற்றிக் டிறஞ்சன்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(சி/551469)

# Mr. S.S. Rajaratnam

**Retired Chief Engineer**
**R.D.A.**

We are very much grieved at the death of Mr.S.S. Rajaratnam beloved husband of our principal **Mrs.Pushpa Rajaratnam**. The Director, The Deputy principal, the staff and the students express our deep sympathies to the bereaved family.

**Director,**
**Deputy Principal,**
**Staff and the Students,**
**International school,**
**Manipay.**

(71153)

# மரண அறிவித்தல்

## தம்பு பாலசிங்கம்

மறவன்புலோவை பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பாலசிங்கம் (மறவன்புலோ) நேற்று (14.02.2008) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சுந்தரம் ஆகியோரின் பாசமிகு மருமகனும், இரட்ணாம்பாளின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ராசம்மா, செல்லத்துரை, கனகம்மா மற்றும் ஆறுமுகம், பாக்கியம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, அன்னலெட்சுமி மற்றும் அருமைநாதன் (பிரான்ஸ்), தனலட்சுமி, செல்வராணி, ருக்குமணி, சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், புலேந்திரன், காலஞ்சென்ற சிவராசா மற்றும் விமலாதேவி (பிரான்ஸ்), சிவசுப்பிரமணியம், தேவராஜ், காலஞ்சென்ற கந்தசாமி, மற்றும் கோணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2008) வெள்ளிக்கிழமை ந.ப.12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
புளியங்கூடல் [illegible] [illegible]
[illegible] மக்கள்.

(71152)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## V ACANCIES - FACULTY OF ARTS

**Assistant Lecturer (on Contract)/Tutor (on Contract)**

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the above mentionted posts up to **21.02.2008** in the disciplines of Anthropology/Archeology/Christian Civilization/Drama & Theatre Arts/Economics/English Literature/ Fine Arts (Art History)/Hindu Civililzation/ Hindu Philosophy/ Home Economics/Law/Linguistics/ Museum Studies/Planning/ Philosophy/ Psychology/Politcal Science/Sociology/Sanskrit/ Tamil.

Note: **Those who have applied for the post of Assistant Lecturer (on Contract) for the advertisement dated 02.01.2008 need not apply again.**

**Candidates who are awaiting the result of the final degree examintion may also apply.**

| Post | Salary |
|---|---|
| Assistant Lecturer | Rs.25,145/- per month fixed |
| Tutor | Rs.20,755/- per month fixed |

Other allowances approved by University Grants Commission will also be paid

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/. per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self - addressed stamped envelope** 23x10 c.m. in size.

Those who wish to apply **for more than one post should make separate applications.**

Applicants from the University Systerm Goverment Depatments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only the sorted list candidates will be called for the interview.

**REGISTRAR.**
2008.02.14 (C/551472)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திருமதி புஸ்பம் இராஜரட்ணம் அவர்களின் அன்புக் கணவர்

## இராஜரட்ணம்

அவர்கள் 14.02.2008 அன்று கொழும்பில் காலமாகி விட்ட செய்தி கேள்வியுற்று மிகவும் மனம்வருந்துகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இயக்குநர், பிரதிஅதிபர், ஆசிரியர், மாணவர்கள், ஊழியர்கள், சர்வதேச பாடசாலை - மானிப்பாய்**

(71154)

# மரண அறிவித்தல்கள்

## *திருமதி மனுவேற்பிள்ளை எலிசபேத் (எலிசம்)*



மிருசுவில், தவசிக்குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், புனித நீக்கிலார் ஆலயத்தைச் சேர்ந்தவருமாகிய திருமதி மனுவேற்பிள்ளை எலிசபேத் (எலிசம்) நேற்று (14.02.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தநாதர் மனுவேற்பிள்ளையின் அன்பு மனைவியும், ம.அந்தோனிப்பிள்ளையின் (அன்ரன்) அன்புத் தாயும், திருமதி அ.சிசிலியாவின் (மணி) அன்பு மாமியாரும், யூட் அருணா (டுபாய்), நிசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை மிருசுவில் வடக்கிலுள்ள அன்னாரின் தற்காலிக இல்லத்தில் இன்று (15.02.2008) வெள்ளிக்கிழமை பி.ப 1 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிருசுவில் வடக்கு,*
*மிருசுவில்.* (71149)

தகவல்:
ம.அந்தோனிப்பிள்ளை
(மகன்)

## *நீக்கிலஸ் அரஸ் இம்மனுவேல்*

**(இளைப்பாறிய விமான நிலைய உத்தியோகத்தர்)**

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத்தெருவை வதிவிடமாகவும் கொண்ட நீக்கிலஸ் அரஸ் இம்மனுவேல் (08.02.2008) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் (இன்னாசி முத்து - பிரபல வர்த்தகர்) - பிரகாசியம்மா தம்பதிகளின் மகனும், துரைசிங்கம் - யோசவின் தம்பதிகளின் மருமகனும், தனராணியின் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ். கன்னியர் மடம்) அன்புக் கனவரும் ரிமோத்தி, சுமதி, சந்திரமதி, வலன்டைன், ரெறன்ஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்றவர்களான யோசப் ஆசீர்வாதம், யோசவின் யோசவ், யோன் எதல்பேட் மற்றும் லோறன்ஸ் அரஸ் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் நடைபெறும். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி இன்று (15.08.2008) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*201/1, 3ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (71147)

தகவல்:
ராணி யோசவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி அரச ஊழியருக்கு ஆங்கில, சிங்கள மொழிப்பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.15

வடபகுதியில் உள்ள அரச ஊழியர்க ளுக்கும் அதிகாரிகளுக்கும் சிங்களம் மற் றும் ஆங்கில மொழி மூலமான பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அரசகரும மொழித்திணைக்களம் இதற்கான சுற்று நிருபங்களை அரச செய லகங்களுக்கும் உள்ளூராட்சி சபைகளுக் கும் அனுப்பி வைத்துள்ளது.

விண்ணப்பதாரர் ஒருவர் ஆங்கிலம் அடிப்படை அல்லது உயர்தர நெறிக்கோ இல்லாதுவிடில் சிங்களநெறிக்கோ விண்ணப்பங்களை அதற்கென உரிய படிவத்தில் தயார் செய்து அனுப் பலாம்.

இவ்வருடம் முதல் ஆங்கிலக் கற்கை நெறி விசேடமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரிவு ரீதியாக பயிற்சி நடத்த அரச கரும மொழித் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இணையத்தளத்திலும் சுற்று நிரு பத்தைப் பார்வையிடலாம் என அறிவிக் கப்பட்டுள்ளது. (203-95)

## வலிகாமத்தில் இன்று முறைசாராப் பயிற்சி ஆரம்பம்

வலிகாமம் கல்விவலய முறைசாராப் பிரிவினால் 14 பாடசாலைகளில் பல்வேறு பயிற்சி நெறிகள் இன்று ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

கணனி - வட்டு இந்து, அராலி சரஸ்வதி, சண்டிலிப்பாய் இந்து, மானிப்பாய் மெமோ றியல், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம், அளவெட்டி அருணோதயா, இணுவில் டென்றல் ஆகிய பாடசாலைகளிலும்

ஆங்கிலம்- விக்ரோறியா கல்லூரியிலும்

உடையமைத்தல்- சங்கானை சிவப்பிரகாசா, மல்லாகம் கனிஷ்ட, குட்டியப்புலம் அ.த.க. ஆகிய பாடசாலைகளிலும்-

தட்டச்சு, சுருக்கெழுத்து- பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலையிலும்-

வீட்டு மின் இணைப்பு - இளவாலை ஹென்றியரசர் கல்லூரியிலும்-

சிங்களம்- இளவாலை றோ.க.த.க பாடசாலையிலும்- மனை முகாமைத்துவம் அள வெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (1)



உடுவில் பிரதேச செயலகம் யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றதை முன்னிட்டு அண்மையில் அக மகிழ்வு விழா நடத்தப்பட்டது.

நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், சுன்னாகம் கதிரமலை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள், உடுவில் பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி, உதவி பிரதேச செயலர் அ.சோதிநாதன் ஆகியோரைப் படத்தில் காணலாம். (203)

# மட்டு. உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு இன்று விநியோகம்

மட்டக்களப்பு,பெப்.15

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக் களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப் படவுள்ளன.

மாவட்டத்திலுள்ள 25 தபால் நிலை யங்கள் மற்றும் உப தபால் அலுவலகங்கள் மூலமாக வாக்குச் சீட்டுகளை உரிய வாக் காளர்களுக்கு வழங்கும் பணிகள் மேற்கொள் ளப்படவுள்ளன என மட்டக்களப்பு உதவித் தேர் தல் ஆணையாளர் ரி.கிருஷ்ணானந்த லிங்கம் தெரிவித்தார்.


குறிப்பிட்ட பிரதேச ரீதியாக பொதி செய்யப்பட்ட வாக்குச்சீட்டுகள் இன்று வெள்ளிக்கிழமை தபால் அலுவலகங்களில் ஒப்படைக்கப்படவுள்ளன. இந்த நடவடிக் கைகளின்போது பொலிஸாரின் ஒத்து ழைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபை மற்றும் எட்டுப் பிரதேச சபைகளுக்கு உறுப்பினர் களைத் தெரிவுசெய்வதற்காக அடுத்த மாதம் 10ஆம் திகதி நடத்தப்படவுள்ள தேர்த லில் வாக்களிப்பதற்காக 2 லட்சத்து 40 ஆயிரத்து 471 வாக்காளர்கள் தகுதி பெற்றுள் ளனர்.

இவர்களுக்கான வாக்காளர் அட்டை களைத் தயாரிக்கும் பணிகள் யாவும் ஏற் கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. உரிய காலப்பகுதிக்குள் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்காளர்கள் அருகில் உள்ள தபால் அலுவலகத்துக்குச் சென்று தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டு தமக்குரிய வாக்காளர் அட்டை களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் உத வித் தேர்தல் ஆணையாளர் கூறினார். (சி)

## மெய்ஞானத்தால் நடுநிலை காப்போம்

உள்ளம் உள்ளங்கை அளவுதான். ஆனால் அதன் சிந்தனை வெளிப்பாடும் செயற் பாடும் உலகை விடப் பெரியது. நல்லெண்ணங்களும் தீய நாட்டங்களும் ஒரே உள்ளத் தில் பொதிந்துகிடக்கிறது. தீயதை கட்டுப்படுத்தி நன்மையை மேலோங்க விடுவது உள் ளக் கட்டுப்பாட்டிலும் ஞானத்தின் தெளிவிலும் தங்கியுள்ளது. சரி எது பிழை எது என் பதை எமது உள்ளம் எந்நேரமும் சொல்லிக் கொண்டேயிருக்கும். ஆனால் சந்தர்ப்ப சூழ் நிலையும் வேண்டியவர், வேண் டாதவர் என்ற பாகுபாடும் உண்மைக்குப் புறம்பாக பக்கம் சாரும் நிலையை தோற்றுவிக்கிறது. இதுவே அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணமா கிறது.




எமது சிந்தனைக் குதிரையைத் தட்டிவிட்டு அது தரும் பொது முடிவினை செயற்படுத்துவதே நடுநிலை தவறாத தீர்ப்பினைத் தரும். உண் மையை எதிர்த்துப் பொய் பேசுவதும் பொறாமை யும், மனக்கசப்பும், கட்சி மனப்பான்மையும் மண் ணுலகு சார்ந்த ஞானமாகும். விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு அதன் தூய் மையாகும். மேலும் அது அமைதியை நாடும். பொறுமை கொள்ளும், இணங்கிப் போகும் தன்மை யுடையது. இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது. நடுநிலை தவறாதது, வெளிவேட மற்றது. அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்த நீதி என் னும் கனி விளைகிறது.(யாக் 3:17, 18)

இறைவனின் மெய்ஞானத்தின் திருச் சித்தத்தை நிறைவேற்றவே இயேசு நடு நிலையாளராகப் பிறந்து எமக்காக இறந்து விடுதலை தந்தார். எமது பணி வாலும், நன்ன டத்தையாலும், நடுநிலையாலும் உள்ளத்தில் இருந்து செயலாற்றும் மெய்ஞானத்தை வெளிப்படுத்துவோம்.

# யாழ்.நகரிலுள்ள நடைபாதைக் கடைகளில் சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருள் விற்பனை

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

குருநகர், பெப்.15

யாழ்.போதனா வைத்தியசாலை முன் பாக உள்ள நடைபாதைக் கடைகளில் சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருள் கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நடைபாதைக் கடைகளில் பிஸ்கட் வகை கள் நிலத்தில் கொட்டி வைக்கப்பட்டு விற் பனை செய்யப்படுகின்றன. அவை சவர்க் கார வகைகள் மற்றும் சம்போ வகை களுடன் வைத்து விற்கப் படுகின்றன.

இதன் காரணமாக உணவுப் பொருள் களில் சவர்க்கார வாசனையே காணப்படு வதாக கூறப்படுகிறது.

பிஸ்கட் வகைகளில் சுகாதாரக் கேடுகள் இருப்பதாக கூறப்படுகிறது.

பிஸ்கட் வகைகள் போன்று மேலும் சில உணவுப் பொருள்கள் இவ்வாறு வைத்து விற்பனை செய்யப்படுவதாக வும் உரியவர்கள் இதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (203-51)

# மெய்வன்மைப் போட்டிகள்

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி யாலய மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் தலை மையில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ். கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கலந்து கொள்வார். (203-29)

* * *

சங்கானை, பெப்.15

வட்டு.இந்துக் கல்லூரியின் மெய்வன் மைப் போட்டிகள் இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மைதா னத்தில் இடம்பெறவுள்ளன.

அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203-29)

* * *

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட சாலை மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப 2மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் சி.கந்தசாமி தலை மையில் நடைபெறும் இப்போட்டி களுக்கு முதன்மை விருந்தினராக தென்ம ராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) நா.சத்திய நாதனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாசபிள்ளையும் கலந்து கொள்வர். (203-160)

* * *

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள் ளன.

அதிபர் திருமதி சீதாலட்சுமி தலை மையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவி ருத்தி) எஸ்.உதயகுமார் கலந்து கொள் வார். (203-160-218)

* * *

நவாலி சென். பீற்றேர்ஸ் றோ.க.த.க பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் யோ.எட்வேட் பங்கிராஸ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய்மகிழ் மகாதேவன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (203-95-100)

* * *

வண்ணை நாவலர் மகாவித்தியாலய மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெற வுள்ளன.

அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமை யில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பிரதி அதி பர் மா.சண்முக ரத்தினம் கலந்து கொள்வார். (203)

* * *

கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற வுள்ளன.

அதிபர் கு.வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கருணாலயம் சிறுவர் இல்ல முகாமையாளர் கு.ஞானச்சந்திரன் கலந்து கொள்வார். (203)

* * *

வடமராட்சி, பெப்.15

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற வுள்ளன.

அதிபர் கு.முத்துத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்வார். (203-160)

* * *

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ கலந்து கொள்வார். (203-160-70-218)

* * *

வடமராட்சி, பெப்.15

தென்புலோலி புற்றளை மகாவித்தி யாலய மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் என்.அனுதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன. பிரதம விருந்தினராக பருத்தித் துறை பிரதேச செயலக உதவிச் செயலர் திருமதி உஷா சுபலிங்கம் கலந்து கொள்வார். (203-160-218)

* * *

வடமராட்சி, பெப்.15

தும்பளை சைவப்பிரகாச மகா வித்தி யாலய மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கே.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன. இலங்கை தேவ சபையைச் சேர்ந்த வண.சிதம்பரப் பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203-160)

* * *

வடமராட்சி, பெப்.15

கரவெட்டி திரு இருதயக்கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி நாளை சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வ.கணபதிப்பிள்ளை தலைமையில் நடை பெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (203-160)

* * *

வடமராட்சி, பெப்.15

வல்வை சிதம்பராக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி நாளை சனிக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். அதிபர் சி.மகேந்திரன் தலைமையில் நடை பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந் தினராக கல்லூரி முன்னாள் அதிபர் ஆவிஜய நாதன் கலந்துகொள்வார். (203)

* * *

யாழ். இந்துக்கல்லூரியின் மெய்வன் மைப் போட்டி நாளை சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் வீ.கணேசராசா தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ்.விவசாய அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் கலந்துகொள்வார். (203)

# கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

கலாசார அலுவல்கள் திணைக்களத் தால் வருடந்தோறும் வழங்கப்பட்டு வரும் கலாபூஷண விருது-2008 இற்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்.பிரதேச செயலக எல்லைக்குட் பட்ட தகுதி வாய்ந்த கலைஞர்களை பிரதேச செயலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கு மாறு பிரதேச செயலர் எம்.ஜெகூ தெரி வித்துள்ளார். (203)

# சண்டிலிப்பாய் கோட்ட மென்பந்துக் கிரிக்கெட்போட்டி

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாட சாலை அணிகளுக்கு இடையேயான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் இன்று மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத் தில் இடம்பெறவுள்ளன.

போட்டியில் கலந்து கொள்ளும் அணி களை உரிய நேரத்திற்கு மைதானத்திற்கு சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது. (203-86)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு

## அமரர் திரு. தியாகராசா மகேஸ்வரன்

(இந்துசமய விவகார முன்னாள் அமைச்சரும் யாழ்.மாவட்ட மற்றும்
கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்)

**அன்னை மடியில்: 10.01.1966** | **இறைவன் அடியில்: 01.01.2008**

கடந்த 01.01.2008 அன்று செவ்வாய்க்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் பஜனையும்- நினைவுமலர் வெளியீடும் இன்று (15.02.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்திலும் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



**அப்பா சின்னக்குழந்தைகளை சீர்செய்து
வளர்க்காமல் சிவனுடன் கலந்தீரோ**

அல்லும் பகலும் அணைத்த அப்பா
ஆதரவாய் வளர்த்த எங்கள் அப்பா
கண்ணை இமைகாத்தது போல் காத்த அப்பா
பண்பான அப்பா பாசமிகு அப்பா
ஓருநாளும் எங்களைப் பிரியாத அப்பா
செல்லுமிடம் எல்லாம் சேர்ந்து வரும் அப்பா
நாற்பத்தைந்து நாட்கள் எங்கள்
அப்பாவைக் காணாமல் அலைகிறோம்.
பெற்றவரைக் காணாமல் புலம்புகிறோம்
அப்பா வளர்த்த அருமையென்ன
வரிசையிட்ட நேர்த்தி என்ன
திக்கெல்லாம் பார்த்து திகைத்து நிற்கிறோம்.
பக்கமெலாம் பார்த்து பதைத்து நிற்கிறோம்
எங்கள் சூரியனோ உதிக்கவில்லை
சூழ்ந்த இருள் நீங்க வில்லை
கலங்கரை விளக்கமான அப்பா
உங்களது கொஞ்ச வயதிலே அப்பா
எங்களை நீங்கள் கொஞ்சும் வயதிலே
அப்பா சீர்செய்து சிறப்பாக பேணாமல்
தொண்டு செய்த சிவனே எங்கள் துணையென்று
வல்ல சிவன் வாசலிலே பேரொளியாய் கலந்தீரே.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொண்டு
அனைவரும் கலந்துகொள்ளவும்.**

தகவல்: திருமதி. மகேஸ்வரன்
பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

**32, 36ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை,
கொழும்பு-06, தொலைபேசி.: 2360679.**

276, பலாலி வீதி, கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

சின்னாலடி, தங்கோடை
காரைநகர்

7Thirty ads

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழப்புகள், காயமடைதல் அதிகரிப்பு
# செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆழ்ந்த கவலை

கொழும்பு,பெப்.15

இலங்கை முழுவதும் மோசமடைந்து வரும் பாதுகாப்புச் சூழ்நிலை காரணமாக குழந்தைகள் உட்பட பொதுமக்களின் உயிர் இழப்புகள், காயமடைதல்கள் என்பன அதிகரித்துச் செல்வதையிட்டு செஞ்சிலுவைச் சர்வதேச குழு ஆழ்ந்த கவலையடைந்துள்ளது என அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களை இலக்கு வைத்து அல்லது இனங்காணப்படாமல் தாக்கி அவர்களுக்கு உயிர் இழப்புகளையும் காயங்களையும் ஏற்படுத்தும் சம்பவங்கள் இவ்வருடத்தின் ஆரம்பம் முதல் அதிகரித்துச் செல்வதை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அவதானித்து வருகிறது.

2008ஆம் ஆண்டின் முதல் 6 வாரங்களில் கொழும்பு, தம்புள்ள, கெப்பிற்றிக்கொல்லாவ, மடு, ஒக்கம்பிட்டிய மற்றும் வெலிஓயா ஆகிய இடங்களில் பயணிகள் பஸ்கள், ரயில் நிலையங்கள் மற்றும் தனி நபர் மீதான தாக்குதல்கள் போன்றவற்றால் 180 இற்கும் மேலான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் சுமார் 270 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் நேரடித் தாக்குதல்களாலும் அல்லது எதிர்பாராது இடம்பெற்ற சம்பவங்களாலும் பாதிப்புற்ற பொதுமக்களின் எண்ணிக்கை அதிர்ச்சி தரும் அளவிற்கு உயர்ந்துள்ளது. இவர்களில் பலர் பாடசாலைகளுக்கோ அல்லது அங்கிருந்து வீடுகளுக்கோ திரும்பிச் சென்றுகொண்டிருந்த சிறார்கள் என்பது கவலைக்குரியது என செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் கொழும்புத் தலைமைப் பேராளர் ரூன் வென்டன் ஹோவ தெரிவித்துள்ளார்.

**பொதுமக்களும் உடைமைகளும் காப்பாற்றப்படவேண்டும்**

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், மோதல்களில் நேரடியாக ஈடுபடுபவர்கள் தாக்கப்படுவதைத் தடைசெய்யவில்லையாயினும், நேரடியாக ஈடுபடாதவர்கள் தாக்கப்படுவதை முற்றாகத் தடை செய்கிறது. அத்துடன், பொதுமக்களும் அவர்களின் உடைமைகளும் எப்பொழுதும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் எடுத்தியம்புகிறது.

ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பும், உதவியும் வழங்கவென ஆணையதிகாரம் பெற்ற மனிதாபிமான நிறுவனம் என்ற அடிப்படையில் செஞ்சிலுவைச் சர்வதேச குழு பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் எதுவித தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிப்பதுடன் பொதுமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சகல வன்முறைகளையும் நிறுத்தும்படி சம்பந்தப்பட்ட சகலரையும் கேட்டுக்கொள்கிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# இலங்கை - மாலைதீவு இடையே இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்து!

கொழும்பு,பெப்.15

இலங்கைக்கும் மாலைதீவுக்குமிடையில் செவ்வாய்க்கிழமை முக்கிய இரு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வைபவமொன்றில் வைத்தே இவ்வுடன்படிக்கைகள் கைச்சாத்தாகின. இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் நன்மை அளிக்கக் கூடிய வகையில் சிறைக்கைதிகளை பரிமாற்றுதல் மற்றும்விசா இன்றி இரு நாடுகளுக்குமிடையில் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன தொடர்பான இரு உடன்படிக்கைகளே கைச்சாத்திடப்பட்டன.

இலங்கை சார்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவும் மாலைதீவு சார்பாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா சஹீட்டும் இப்புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டனர் என அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# தமிழர்களின் ஆதரவு புலிகளுக்குக் கிடைப்பதை தடுக்கவே தமிழ்ப் பத்திரிகைகள் மீது பாய்ச்சல்!

## அரசின் போக்குக் குறித்து எல்லைகளற்ற நிருபர் அமைப்பு அறிக்கை

கொழும்பு,பெப். 15

விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவளிப்பதைத் தடுப்பதற்காக அரசு எடுத்துள்ள கடுமையான நடவடிக்கைகளால் தமிழ்ப் பத்திரிகைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனப் பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'எல்லைகளற்ற நிருபர்கள்' என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகில் பத்திரிகையாளர்களுக்கு மிகவும் பயங்கரமான இடமாக யாழ்ப்பாணம் காணப்படுவதாகவும் அந்த அமைப்பு தனது 200 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இந்த அமைப்பு அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

இலங்கை அரசும் இராணுவமும் விடுதலைப் புலிகள் மீதான இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவசியமென்றால், மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கு மத்தியிலும் கிளர்ச்சியை நசுக்குவதற்கு உறுதிபூண்டுள்ளார்.

பாதுகாப்புப் படையினர் ஆயுதக் குழுக்களின் உதவியுடன் தமிழர் பகுதிகளில் அச்சத்தை விதைத்து வருகின்றனர். மேலும் சட்டவிரோதப் படுகொலைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். கடத்தல்களும் அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன.

**யுத்தத்தை நியாயப்படுத்தும் அரசு**

சர்வதேச கண்டனங்களுக்கு மத்தியிலும், தனது மோசமான யுத்தத்தை - பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனக் காட்டி- அதனை அரசு நியாயப்படுத்தி வருகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவளிப்பதைத் தடுக்கும் அரசின் தந்திரோபாயத்தினால் தமிழ்ப் பத்திரிகைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடும் போக்குத் தேசியவாதிகளைத் தனது சகாக்களாகக் கொண்ட அரசு, கொழும்பில் சுதந்திர ஊடகங்கள் மீது கடும் நடவடிக்கைகளை எடுத்தது.

இவ்வருடம் முழுவதும் அரசுத் தரப்பினரும் அதன் சகாக்களும் தமிழ் மக்களிற்கு சுயாதீனத் தகவல்கள் சென்றடைவதைத் தடுக்க முயன்றனர்.

இராணுவத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் யாழ்ப்பாணம், பத்திரிகையாளர்களுக்கு மிகவும் ஆபத்தான இடமாக விளங்குகின்றது.

கொலைகள், கடத்தல், மிரட்டல் மற்றும் செய்தித் தணிக்கை காரணமாக யாழ்ப்பாணம், பத்திரிகையாளர்களுக்கு உலகில் மிகவும் ஆபத்தான இடமாகவுள்ளது.

**உரிய விசாரணை இதுவரை இல்லை**

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் காணாமல்போன இரண்டு பத்திரிகையாளர்கள் குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை. அரசு இதற்கான உறுதிமொழியை வழங்கியிருந்த போதிலும் அது சரிவர நடக்கவில்லை.

2006 இல் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கித் தாக்குதல் குறித்தும் உரிய விசாரணைகள் இடம்பெறவில்லை.

இத்தாக்குதலின் சூத்திரதாரி அடையாளம் காணப்பட்ட போதிலும் அந்த நபர் இன்னமும் சுதந்திரமாக நடமாடுகின்றார்.

'உதயன்' அலுவலகப் பணியாளர்கள் கடும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். நிறுவனத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டிலிருந்து பல வெளிநாட்டு செய்திச் சேவைகளும் வெளியேறியுள்ளன.

இதேவேளை, கடந்த வருடம் யாழ். குடாநாட்டின் பத்திரிகைகள் தமது பிரசுரத்திற்குத் தேவையான பொருள்களைப் பெறுவதிலும் கடும் நெருக்கடியைச் சந்தித்தன.

- இப்படி இலங்கைப் பத்திரிகைகள் தொடர்பான தனது வருடாந்த அறிக்கையில் எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. (சி)

# திருமலை அனல் மின் நிலையம்: ஒப்பந்தம் கைச்சாத்தாகியது

கொழும்பு,பெப்.15

திருகோணமலையில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள அனல் மின் நிலையத்துக்கான ஒப்பந்தம் இலங்கை மின்சாரசபைக்கும் இந்திய தேசிய அனல் மின் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் கடந்த புதன்கிழமை கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த அனல் மின்நிலையத்தினை திருகோணமலை மாவட்டம் நிலாவெளியில் அமைப்பதற்கு இரு தரப்பினரும் உத்தியோகபூர்வமாக இணங்கியுள்ளனர்.

படையினரால் மீட்கப்பட்ட சம்பூர் பிரதேசத்தில் இந்த அனல் மின்நிலையத்தை அமைப்பதற்கு அரசு ஆரம்பத்தில் நடவடிக்கை எடுத்திருந்தது.

ஆயினும், அந்தப் பிரதேசத்தில் மின் நிலையத்தை அமைப்பதற்கு இந்தியா விருப்பம் தெரிவிக்கவில்லை. இதனையடுத்து இத்திட்டம்கிடப்பில் கிடந்தது.

இத்திட்டம் குறித்து கருத்து தெரிவித்த இந்திய வர்த்தகத்துறை இணை அமைச்சரும் ஜெய்ராம் ரமேஷ் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கை மின்சாரசபைக்கும் இந்திய தேசிய அனல் மின் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையிலான ஒப்பந்தம் 500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான ஒன்றாகும். இதனை அமைப்பது முன்பு சிபாரிசு செய்யப்பட்ட இடம் அல்ல. மாறாக திருகோணமலையின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள வேலூர் கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து எழுத்து மூலம் ஒரு இணக்கப்பாட்டை எட்டியுள்ளோம்.

இதன் முதலாவது அனல் மின் பிறப்பாக்கி அலகு எதிர்வரும் 2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் ஆரம்பிக்கப்படலாம். ஒட்டுமொத்த 500 மெகாவோட் மின் உற்பத்தி திட்டமும் இரண்டாயிரத்து 12ஆம் ஆண்டு ஜூலை மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டு விடும் - என்று அவர் தெரிவித்தார். (சி)

# தமிழரின் வங்கிக் கணக்கு விவரம் பொலிஸ் கோருவது உரிமை மீறல்!

## குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக படிவம் சமர்ப்பிப்பு

கொழும்பு,பெப்.15

கொழும்பில் தங்கியிருக்கும் - அல்லது வசிக்கும் - தமிழர்களிடம் அவர்களின் வங்கிக் கணக்குகளின் விவரங்களையும் அவற்றில் உள்ள பணத்தின் தொகையையும் தெரிவிக்கும்படி வற்புறுத்தும் ஒழுங்கு விதியை பொலிஸார் பலவந்தமாகத் திணிப்பது பெரும் சட்ட மீறலும் அடிப்படை உரிமை மீறலுமாகும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் தமிழர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

தலைநகரிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழர்கள் வகைதொகையின்றி கைதுசெய்யப்படுவதை ஆட்சேபித்து இ.தொ.கா. தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மனுதாரர் தரப்பின் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இத்தகவலை நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தினார்.

ரேற்படி வங்கிக் கணக்கு இலக்கங்கள், அவற்றில் உள்ள பணத்தின் தொகை ஆகியவற்றை வெளிப்படுத்தும்படி கோரி முகத்துவாரம் பொலிஸாரால் அப்பகுதித் தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட படிவத்தின் பிரதியும் நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பு சட்டத்தரணியால் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வாறு தங்களின் வங்கிக் கணக்கு, அதில் உள்ள பணத்தொகை போன்ற விடயங்களை வெளிப்படுத்துமாறு வலியுறுத்துவது - கட்டாயப்படுத்துவது - சம்பந்தப்பட்ட நபரின் அடிப்படை உரிமையை அப்பட்டமாக மீறும் செயற்பாடாகும்.

இப்படி ஒவ்வொரு பொலிஸ் நிலையமும் தன்னிச்சைப்படி - தான்தோன்றித்தனமாக - தத்தமது பிரதேசங்களில் தமிழர்களை மோசமான நெருக்குதல்களுக்கும் சட்டவிரோதமான முறையில் அழுத்தங்களுக்கும் உட்படுத்துகின்றன - என்றும் மனுதாரர் தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார். (சி)

# எண்ணம்போலவே வாழ்வு அமையும்

ஞானக்கதிர்

முனிவர் ஒருவர் யோகநிலையில் இருந்தார். எப்பொழுதாவது இறைவனைத் தரிசித்துவிடவேண்டுமென்பது அந்த முனிவருடைய ஆசை. முனிவருடைய தவ வலிமை ஒருநாள் வெற்றிபெற்றது. இறைவனும் முனிவரின் தவவலிமையைக் கண்டு அவர்முன் பிரசன்னமானார். முனிவர் தான் எண்ணியபடியே தவத்தின் மூலம் இறைவனைக் கண்டுவிட்ட பரமானந்தத்தில் மூழ்கித் திளைத்தார். பிறகு ஒரு வழியாகச் சுயநினைவை அடைந்து பக்தி பரவசத்துடன் இறைவனை நோக்கிக் கைகுவித்தவாறு நின்றார். இறைவன் முனிவரிடம் உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும் தருகின்றேன் என்றார். முனிவரும் மிகவும் அகமகிழ்ந்து தான் எண்ணியது போல் எல்லாம் நடக்கவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொண்டார்.

இறைவனும் முனிவரை நோக்கி நீர் நினைத்தபடியே எல்லாம் இனிதாக நடக்கும் என்று அருள் செய்துவிட்டு மறைந்தார். பின்பு முனிவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் தன் தவத்தின் மேன்மையால் வரம் பெற்றுவிட்டோம் என்று நினைந்து, அதை உடனே பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்று ஆசை கொண்டார். இப்படி முனிவரின் மனத்தில் ஆசை தோன்றியவுடன் தான் மிகவும் பசியுடன் இருப்பதை உணர்ந்தார். ஊண், உறக்கம் இன்றி முனிவர் தவம் செய்து இருக்கிறார் அல்லவா? எனவே பசியும் உடனே வந்து விட்டது. சுவை உணவு வகைகள் தன் முன் வரவேண்டும். அவற்றை நன்கு சுவைத்து உண்ண வேண்டும் என்று எண்ணினார். உடனே முனிவர் முன்பாக தோன்றிய உணவு வகைகள் அனைத்தையும் சுவைத்துச் சாப்பிட்டார். அப்புறம் நீர் அருந்தி உண்ட களைப்புத் தீரப் படுத்து உறங்கினார்.

இரவு வந்தது முனிவருக்கு மனத்தில் பயம் வந்தது. இதுவரை மிகவும் அமானுஷ்யமாகச் சோபையுடன் காட்சி அளித்த அந்த வனப்பகுதி அப்பொழுது மிகவும் பயங்கரமாகக் காட்சி அளிக்க ஆரம்பித்தது. வனத்தில் இரவுநேரப் பட்சிகள் சத்தமிட்டன. வனவிலங்குகள் பல விதமாகக் கர்ஜனை செய்தன. முனிவரின் மனத்தில் மெதுவாக பயம் அரும்பத் துவங்கியது. அவர் முன்பு இருந்த மரங்கள் இராட்சத மிருகங்கள்போல் தோற்றமளித்தன. எந்த மரத்தின் கீழ் அமர்ந்து தவநிலையில் இருந்தாரோ அந்த மரமே அவர்மீது விழுந்து விடுமோ என்று தோன்றும் விதத்தில் ஆட ஆரம்பித்தது. முனிவரிடம் கிலி தோன்றிவிட்டது. தவநிலையில் இருந்தபோது இப்படியெல்லாம் ஏற்படவில்லையே என்று உணரலானார்.

அந்த இரவுநேரத்தில் பயங்கரமான வனபட்சிகள் தன்னைக் கொத்தவந்து விடுமோ.. பயங்கரமான வனவிலங்குகள் தன்னை நோக்கி வந்து தன்னைக் கடித்துத் தின்று விடுமோ.. என்று எண்ணினார். முனிவர் எண்ணிய படியே கொடூரமான நீண்ட அலகுகளை உடைய பட்சிகள் முனிவர் முன்வந்து முனிவரைக் கொத்த ஆரம்பித்தன. முனிவர் அலறினார். பயங்கரமான வனவிலங்குகள் முனிவர் முன்பு வந்து முனிவரைக் கடித்துத் தின்றன. முனிவர் பட்சிகளுக்கும், விலங்குகளுக்கும் உணவானார். தவத்தின் இலக்கு முத்திநிலையை நோக்கி இருக்கவேண்டும். உயர்வான நிலையை அடையும் வழியிலேயே இருக்கவேண்டும். அற்ப சுகங்களில், உலக இன்பங்களில் மூழ்க வேண்டும் என்ற ஆசையுடன் இருந்தால் அவை அழிவைத்தான் தரும் என்பதற்கு முனிவர் இறைவனிடம் கேட்டவரமே ஓர் உதாரணம். உயிர் உள்ளவரைக்கும் உயர்வைப் பற்றியே எண்ணுக என்னும் சான்றோர் வாக்கும் இதையே உணர்த்துகிறது.

நன்றி : ஞானச்சுடர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு



இன்று 15.02.2008
ஓய்வுபெறும் எமது
பாடசாலை ஆசிரியை

**திருமதி**
**பங்கயச்செல்வி**
**சிவகுமாரன்**
**(S.L.T.S-I)**

**சேவைவிவரம்**

| இடம் | பதவி | காலம் |
|---|---|---|
| 1. யா/புன்னாலைக்கட்டுவன் ஆங்கில மகாவித்தியாலயம் | ஆசிரியர் | 01.02.1972-19.02.1972 |
| 2. யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் | ஆசிரியர் | 20.02.1972-28.02.1972 |
| 3. யா/யூனியன் கல்லூரி | ஆசிரியர் | 01.03.1972-31.01.1974 |
| 4. யா/பலாலி சித்திவிநாயகர் வித். | ஆசிரியர் | 01.02.1974-23.01.1977 |
| 5. யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | ஆசிரியர் | 24.01.1977-31.12.1978 |
| 6. மன்/எருக்கலம் மகளிர் மகாவித். | ஆசிரியர் | 01.01.1979-30.04.1986 |
| 7. யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி | ஆசிரியர் | 01.05.1986-31.01.1990 |
| 8. யா/வட்டு இந்துக்கல்லூரி | ஆசிரியர் | 01.02.1990-28.02.1998 |
| 9. யா/வட்டு மத்திய கல்லூரி | ஆசிரியர் | 01.03.1991-இன்றுவரை |

எமது கல்லூரியில் 18 வருடங்கள் ஆசிரியராகவும் 09 வருடங்கள் பகுதித் தலைவராகவும் அரும்பணியாற்றி இன்று 15.02.2008 ஓய்வுபெறும் ஆசிரியரின் சேவையைப் பாராட்டுவதோடு அவரின் ஓய்வுகாலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

(71127)
**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/வட்டு மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
15 - 11 - 1934



உதிர்வு
17 - 01 - 2008

## அமரர் முருகேசு மகாகந்தையா (மாப்பிள்ளை)

அன்பின் இலக்கணமாய்
அன்னையின் உறைவிடமாய்
ஆசையாய் வைகறையில் வைரவரையும்
அதன் பின் துரையப்பரையும் வணங்கி
அண்ணர் சிரிப்போடு சகோதரியுடன்
வகைபேசி
வாழ்வுக்கு அதிகாரியாய்

மகத்தான பண்புகொண்டு
மாப்பிள்ளை மாமாவானீர்
நிலையற்ற தரணியில் வாழ்ந்தது
போதுமென்று
நிம்மதியாய் தூங்குகின்றீரோ?
பாதி வழிதனிலே எம்மையெல்லாம்
பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ?

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

(71135)

அலுக்கை,
அளவெட்டி கிழக்கு.

ஆறாத்துயருடன்:
சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி தவமணி (உசன்)



உசன் தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தவமணி 13.02.2008 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் கருணாகரதேவி (ஆசிரியை, விடத்தற்பழை, கமலாசனி வித்தியாலயம்), சிவலோகநாயகியின் (பிரதி அதிபர், கச்சாய் அ.த.க.பாடசாலை) அன்புத் தாயும் சிவபாதசுந்தரம், தவபாலன் ஆகியோரின் அன்பு மாமியும் சிவதீபா, கருணதீபா, சிவரச்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.02.2008) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மத்திய வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை (71140)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# நடனப் பயிற்சிக்கான பதிவு இடம்பெறுகிறது

யாழ்ப்பாணம், பெப்.15

யாழ்.நகர்மைய றோட்டறிக்கழகத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை நடனப்பயிற்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கான பதிவுகள் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சாயிநர்த்தன கேந்திரா நிலையத்தில் நடைபெற்று வருகின்றன.

நாளை சனிக்கிழமை வரை இதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் பயிற்சிகளில் கலந்துகொள்ள விரும்புவோரை பதிவு செய்யுமாறும் கழகத்தினர் கேட்டுள்ளனர்.

(203)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் PIRIMA சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 15.02.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**ராஜீவ்**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (71110)

## MATHAN ELECTRONICS

சகல விதமான T.V. களும் உடனுக்குடன் திருத்திக்கொடுக்கப்படும்.
SONY T.V. 21",KV 2183, KV 2184, KV 2185, G21 போன்றன விற்பனைக்குண்டு (1வருட உத்தரவாதம் வழங்கப்படும்).
மதன் எலற்றோனிக்ஸ் கருமலைச் சந்தி, மானிப்பாய்.
T.P.: 0776699623, 0776571156.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இரண்டு கார்கள் உடன் விற்பனைக்கு NISSAN SUNNY- NPHE XXXX தொடர் இலக்கமுடையது. TOYOTA COROLLA WP.JR XXXX தொடர் இலக்கமுடையது. தொடர்பு:
57, செம்மற்றிக் றோட், யாழ்ப்பாணம்.
T.P.: 0776062569, 0214590175.

## மணமகள் தேவை

இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள்.
1974 M.B.B.S. Doctor
1973 B.A. மாஸ்ரர்
1977 B.Sc.
1976 ஆஸ்திரேலியா
மணமகன்களுக்கு மணமகள் தேவை.
வெளிநாடு, உள்ளூர் சாதகங்கள் இருக்கின்றன.
(71124)

## இந்தியாவில் பிரிந்தாவன் கல்லூரியில் படியுங்கள்

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

உயர் தரம் A/L 2 சித்திகளுடன்

பதிவுகள் இப்பொழுது நடைபெறுகின்றன

SMS 011 - 4520270 Name & Address for details
Contact: 0777 317043
Company Secretarial Services (Pvt) Ltd.

## விற்பனைக்கு

அலுவலகங்களின் அல்லது நூல் நிலையங்களின் பாவனைக்கேற்ற மலை வேம்பிலான (மகோகனி) 8½' x 5' விஸ்தீரணமுள்ள (42½ ச.அடி) நல்ல முறையில் வாணிஸ் பூசப்பட்ட மேசை, தேக்கமரத்தினாலான 4 குஷன் கதிரைகளுடன் கூடிய சாப்பாட்டு மேசை, ஹோட்டல் பாவனைக்குரிய சமையல் பாத்திரங்கள், நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ள 3ஸ்ரீ XXXX தொடர் இலக்கமுடைய W FORD ANGLIA' (போட் அங்கிளியா) கார் என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0212223818, 0774528818
148, கோயில்வீதி, யாழ்ப்பாணம்
(யூனிசெவ் முன்பாக). (71114)

# அறிவித்தல்

**கோப்பாய் மத்தியைச் சேர்ந்த முருகேசு சுவாமிநாதன் மயில்வாகனம் ஆகிய நான் இத்தால் அறியத்தருவது:**

பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள சுவாமிநாதர் கனகசபையின் ஆட்சியில் உள்ள முன்பு சுகாதாரத் திணைக்கள அலுவலகம் அமைந்த நில. ப.3½ உள்ள 'கழுவடி' என்ற காணி தொடர்பில் எனக்கும் குறித்த கனகசபைக்கும் இடையில் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை உண்டு. இக்காணி என்னால் தான் கனகசபைக்கு கையளிக்கப்பட்டது. இது தொர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. இக் காணியை விலைக்கு வாங்குபவர்கள் யாராக இருந்தாலும் இதனால் வரும் விளைவுகளுக்கு பொறுப்பு எடுக்க வேண்டும் என்றும் இதனால் வரும் விளைவுகளுக்கு நான் பொறுப்பு இல்லை என்றும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**மு.சு.மயில்வாகனம்**

முதலியார் வளவு,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (71139)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிதம்பரி தங்கவேல்**
(இளைப்பாறிய அதிபர்,
யா/அச்சுவேலி சரஸ்வதி
வித்தியாசாலை)

பிறப்பு: 08.03.1940
இறப்பு: 08.03.2006

காலம் கவலைகளை ஆற்றுமாம்
ஆண்டுகள் இரண்டு உருண்டுவிட்ட போதிலும்
உம் பிரிவுத்துயர்- இன்னும்
எம் நெஞ்சில் ரணமாய்....
காலன் வென்றிருக்கலாம்
காலம் தோற்பது நிஜம்.

நாவற்காடு, அச்சுவேலி.

என்றும் உம் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(71130)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
10 - 12 - 1920



மறைவு
16 - 01 - 2008

## அமரர் முருகேசு நரசிங்கம்

கடந்த 16.01.2008 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தையின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு ஆறுதல் தெரிவித்தோருக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, இன்று (15.02.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உடுப்பிட்டி வீதி,
மாலிசந்தி,
வதிரி, கரவெட்டி.

**குடும்பத்தினர்.**

(ரி/551467)




**சாட்ஸ்-ரெக் நிறுவனத்தின்** செய்மதி தொலைக்காட்சித் துறையின்
20 ஆவது வருட நிறைவையும் யாழ்.விற்பனை நிலையத்தின் 7ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு

சிறப்புத் தள்ளுபடி விற்பனை

சண் T.V.,K.T.V., விஜய்T.V., சண்மியூசிக், சண்நியூஸ், சுட்டிT.V., ராஜ்T.V., ராஜ் Digital இசையருவி, விண்T.V., மெகாT.V., தமிழன்T.V., S.S.மியூசிக் உட்பட 181 மற்றும் 102 சானல்களைக் கண்டுகளிக்கக்கூடிய டிஸ் T.V. பக்கேஜ்கள் மிகக்குறைந்த விலையில்!
தங்களின் மேலான ஆதரவுக்கான எமது நன்றிகளுடன்



Dish TV (MAXI)
181 சானல்
(3 மாத இலவசக் கட்டணம்)
ரூபாய் 12000/-



Dish TV (Freedom plus)
102 சானல்கள்
(ஒருவருட இலவசக் கட்டணம்)
ரூபாய் 12500/-

மேலதிக விவரங்களுக்கு:
SATS- TECH ENGINEERS
No: 182, K.K.S.வீதி,
[illegible]

★SATS- TECH இந்தியாவில் SSI மற்றும் இலங்கையில், TRC அனுமதி பெற்ற நிறுவனமாகும்.
★Dish TVக்குரிய கட்டணங்கள் உடனுக்குடன் செலுத்தித் தரப்படும்.
★விரைவில் SATS- TECH தலைநகர் கொழும்பிலும் உதயம்.
★கேபிள் TVக்குரிய உதிரிப்பாகங்கள், டிஸ் அன்ரனாக்கள் அனைத்திற்கும் விசேட விலைக் கழிவு.

Phone: 021 222 5908, Hot Line: 0777- 710785 E.mail:Satstech@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நோயின் மூலத்துக்கு சிகிச்சை அளிக்காமல் நோயின் உபாதைக்கு மருந்திடும் எத்தனம்

இலங்கையை ஆட்டிப்படைக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதிவழித் தீர்வு ஒன்றைக் காண்பதில் உள்ள சிக்கல்கள் மற்றும் நெருக்கடிகள் குறித்தும், இவ்விடயத்தில் தென்னிலங்கையின் தவறான கையாள்கை பற்றியும் இப்பத்தியில் நாம் பல தடவைகள் பிரஸ்தாபித்தாயிற்று.

இனப்பிரச்சினை என்ற நோய்க்கு மூலகாரணத்தைக் கண்டுபிடித்து, அதற்கு வைத்தியம் செய்வதை விடுத்து, அந்த நோய் வெளிப்படுத்தும் உபாதைக்கு - அல்லது அந்த நோயின் குணங்குறிக்கு - மருந்துசெய்யத் துடிக்கிறது தென்னிலங்கை.

அதன் மூலம் நோயை முற்றாகக் குணப்படுத்தலாம் என்று தப்புக் கணக்கும் போடுகின்றது அது.

தமிழர்களுக்கு நியாயம் செய்யப்படாததால் - தமிழின அழிப்பும், ஒடுக்குமுறையும், ஓரவஞ்சனையும், பாகுபாடும் தலைவிரித்தாடியமையால் - சமத்துவமான, கௌரவ வாழ்வு மறுக்கப்பட்டதால் - இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்து, பூதாகரமாகி, இன்று பெரும் உள்நாட்டுப் போராக வெடித்திருக்கின்றது.

இந்த இனப்பிரச்சினை என்ற நோயின் பூர்வாங்க வெளிப்பாடு - அல்லது குணங்குறி - அல்லது உபாதை - தமிழர் தரப்பிலிருந்து அஹிம்சை வடிவிலான, அறவயப்பட்ட, காந்தியத் தத்துவத்தில் நெறிக்கப்பட்ட, சாத்வீகப் போராட்டமாகத்தான் முதலில் வெளித்தோற்றியது.

சுமார் முப்பது ஆண்டுகள் வெறும் குந்து மறியலிலும், சத்தியாக்கிரகத்திலும், சட்டமறுப்பிலும், பகிஷ்கரிப்புப் போராட்டத்திலும் தான் தமிழர்கள் ஈடுபட்டார்கள்.

அச்சமயத்தில் கூட அந்த நோயின் மூல காரணியான இனப்பிரச்சினைக்கு மருந்து செய்வதற்கு அதிகாரத்தில் மமதையோடு வீற்றிருந்த சிங்களத் தலைமைகள் முயலவில்லை; முன்வரவில்லை.

மாறாக அமைதி வழியில் முன்னெடுக்கப்பட்ட அந்தத் தமிழ்த் தேசிய எழுச்சிப் போராட்டங்கள் ஆயுத முனையில் அடக்கப்பட்டன. அரசின் ஒடுக்குமுறை இயந்திரம், அமைதி வழிப் போராளிகள் மீது இராணுவத்தை ஏவிவிட்டது. அவசரகாலச்சட்டம், ஊரடங்குச் சட்டம் என்பவற்றின் பெயரால் இராணுவப் பயங்கரவாதம் முதன்முதலில் தமிழர் தாயகம் எங்கும் கட்டவிழ்ந்தது.

ஒடுக்குமுறையாளரின் வன்முறை, ஒடுக்கப்பட்டவர்களின் சாத்வீகப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கியது. நீதி வேண்டிய தமிழரின் அஹிம்சைப் பாதையை சிங்களத்தின் ஆயுதபலம் அடக்கி, நொறுக்கி, நசுக்கியது.

மனித நேயப் பண்புகளினதும், நாகரிக நடைமுறைகளினதும் ஒழுக்க சீலங்கள் அனைத்தையும் நிராகரித்து, இனவெறிக் காழ்ப்புணர்வில் ஊறித் திளைத்திருக்கும் பேரினவாத ஆட்சியாளர்களின் கொடிய ஒடுக்குமுறை இராணுவ மேலாதிக்க அதிகாரத்தின் முன்னால் காந்திய நெறியின் சாத்வீக அணுகுமுறையுடனும் அதன் தார்மீகப் பலத்தோடும் எதிர்த்து நிற்க முடியாது என்ற உண்மை தமிழர்களுக்குப் புரிந்தபோதுதான் - சுமார் மூன்று தசாப்தகால பயனற்ற அஹிம்சைப் போரின் பின்பே - ஆயுதம் தூக்குவதைத் தவிர வேறு எந்த மார்க்கமுமே தமக்கு இல்லை என்ற கட்டாய நிலைமைக்குத் தமிழரின் தேசம் தள்ளப்பட்டது.

அதிகார ஆட்சிப்பீடத்தின் துப்பாக்கிப் பலத்தின் முன்னே சிறுபான்மையினரான தமிழர்களின் அரசியல் போராட்டத்தின் சாத்வீக அடித்தளம் பலமற்றது என்ற உண்மையை முழு அளவில் உணர்ந்து கொண்ட சிங்களத் தலைமை, அந்த மெய்நிலை கொடுத்த உற்சாகத்தால் மென்மேலும் இன அடக்குமுறையைத் தமிழர் தேசம் மீது கட்டவிழ்த்து விட்டது.

இந்தத் தொடர் போக்கின் விளைவாகவே - பேரினவாத அடக்குமுறைப் போக்கின் வரலாற்றுப் பெறுபேறாகவே - தமிழர்களின் ஆயுதம் தரித்த எதிர்ப் போராட்டம் இங்கு பிறப்பெடுத்தது.

இப்போதும் கூட இந்த எதிர்ப்பு இயக்கத்தை அதே வன்முறைப்பாதையால் அடக்கி, ஒடுக்கி, தமிழரின் விடுதலை உணர்வை நசுக்கிவிடலாம் என்று திட்டமிடுகிறது சிங்களம். அப்படிச் செய்வதன் மூலம் இலங்கைப் பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்றும் தவறாகக் கணக்குப் போடுகிறது கொழும்புத் தலைமை.

இச்சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்சினை என்ற நோயின் மூலத்துக்கு மருந்து செய்வதை விடுத்து அதன் உபாதையாக சித்திரிக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு மருந்து செய்ய முற்படும் கொழும்பின் செயல்போக்கின் பின்னணி இதுதான்.

தனியாகப் புலிகளின் தலைவர் பிரபாகரனையோ, அவரின் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையோ அழித்துவிடுவதன் மூலம் இலங்கைத் தீவை ஆட்டிப் படைத்து வரும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டுவிடலாம் என்ற குறுகிய சிந்தனைப் போக்குக்குள் சிக்கி, அதனடிப்படையில் மனக்கோட்டை கட்டுகிறது கொழும்பு.

அதன் பிரதிபலிப்பாகவே கொழும்பில் அரங்கேறும் பெரும் பீரங்கிப் பிரசாரங்களையும், அளப்பரிய நம்பிக்கை வாக்குறுதிகளையும், தத்துவ சித்தாந்த விளக்கங்களையும் இன்று காண்கின்றோம்.

இனப்பிரச்சினை என்ற நோயின் மூலகாரணத்துக்குச் சிகிச்சை அளிக்காமல் பக்க விளைவுகளுக்கு சிகிச்சை அளித்துச் சமாளிக்க முயலும் கொழும்பின் போக்கு இலங்கைத்தீவை மீளமுடியாத சீக்காளியாக்கிவிடும் என்பதனை இவர்கள் உணர்வது எப்போது?

# விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புக் கிடைக்காதவரை இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது

## தமிழகத்தில் வைத்து அமைச்சர் சந்திரசேகரன்

சென்னை,பெப்.15

விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இல்லாத பட்சத்தில் இலங்கையில் அதிகாரப் பகிர்வு யோசனை எதுவும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பேயில்லை.

சமூக அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு விவகார அமைச்சர் பெ.சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் மக்களினால் கடந்த காலங்களில் நிராகரிக்கப்பட்ட [illegible]வரைகளையே அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு தற்போது முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவற்றைக் கூறினார்.

தமிழ் மக்கள் ஆரம்பகாலங்களில் நிராகரித்தவற்றையே அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு தற்போது மீண்டும் முன்வைத்துள்ளது என தெரிவித்துள்ள அவர், இந்தப் பரிந்துரைகளை விட அதிகளவு அதிகாரப் பகிர்வை வழங்குவது குறித்து இது வரை ஆராயப்பட்டு வந்தமையையும் சுட்டிக்காட்டியுள்ளார்.



அரசமைப் பின் 13ஆவது திருத்தம் குறித்து தற்போது சிந்திப்பது இனப்பிரச்சினைக்கு தீர்வை காணும் நிலையிலிருந்து அவசரமாகப் பின்வாங்கும் நடவடிக்கை யாக அமையும் என்றும் சந்திரசேகரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

### பேச்சுவார்த்தைக்கு இந்தியா உதவவேண்டும்

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சு நடத்துவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை அரசின் அதிகாரப் பகிர்வு யோசனைகள் தமிழ் மக்களுக்கு நன்மையளிக்குமா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு -

''தமிழ் மக்களினதும் விடுதலைப் புலிகளினதும் ஒத்துழைப்பு கிடைக்காத பட்சத்தில் எத்தகைய முயற்சியும் வெற்றி பெறாது. இதுவே யதார்த்தம்.'' - என அமைச்சர் குறிப்பிட்டார்.

சகல பிரச்சினைகளுக்குமான ஒரே தீர்வு பேச்சே. விடுதலைப் புலிகளின் சகல முயற்சிகளுக்கும் ஒரே மாற்று வழிமுறை பேச்சே என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(அ-உ)

# இராணுவத் தீர்வு சாத்தியமில்லை என்றால் போர்நிறுத்தத்திலிருந்து விலகியது ஏன்?

## சிவாஜிலிங்கம் எம்.பி. கேட்கிறார்



சென்னை,பெப்.15

இலங்கையில் இராணுவத் தீர்வு சாத்தியமில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்து வருகின்றார்.

அவ்வாறெனில், போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அரசாங்கம் விலகியது ஏன்?

இலங்கை அரசின் இரட்டை வேடத்தையே இது எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் இங்கு வைத்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

மாகாண மட்டத்தில் அதிகாரத்தை பகிர்வதென்ற இலங்கை அரசின் கருத்துத் தமது சொந்த நாட்டில் நிம்மதியான வாழ்க்கை வாழ முடியாத நிலையில் உள்ள தமிழ் மக்கள் குறித்து வெளியிடப்படும் ஒரு நகைச்சுவையாகும்.

அனைத்துக் கட்சிக்குழு சமீபத்தில் முன்வைத்துள்ள யோசனைகளை 1956இலேயே தமிழ் தலைவர்கள் நிராகரித்துவிட்டனர்.

தனது பிரஜைகளின் அடிப்படைப் பிரச்சினைகளைக்கூடத் தீர்க்க முயலாத இந்த அரசின் தற்போதைய முயற்சியை தமிழ் மக்கள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

அரசின் இந்த யோசனை ஏற்றுக் கொள்ள முடியாதது. அரசு தமிழ் மக்களுக்கு இழைக்கும் அநீதி இது.

வடக்கிற்கும் கிழக்கிற்கும் தனித்தனி ஏற்பாட்டை அரசு ஏன் செய்கிறது? எதற்காக?

தமிழ் மக்களின் நீண்டகாலக் கனவான 'தமிழ்த் தாயகம்' என்பதை அடைவதற்கு இந்தியா உதவவேண்டும். அது ஈழ சுதந்திரப் போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்கின்றோம்.- என்றார். (அ-உ)

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நடமாடும் சேவையை ஆரம்பிக்கிறது

## முதல் கட்டம் நாளை வட்டு - தெற்கில்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை குடாநாட்டின் பிரதேசங்கள் தோறும் வைத்திய சேவையை வழங்கும் நோக்கில் நடமாடும் வைத்திய சேவையொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையில் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுடன் ஆலோசனைகள் நடத்தப்பட்டதையடுத்து இதன் முதலாவது நடமாடும் வைத்தியசேவை நாளை சனிக்கிழமை வட்டுக்கோட்டை தெற்கு மையக் கிராமத்தில் நடத்தப்படவிருக்கின்றது.

இந்நடமாடும் வைத்தியசேவையில் ஆய்வு கூட வசதிகள், நோய்கள் தொடர்பான விளக்கவுரைகள், நிபுணர்களின்மருத்துவ சேவைகள் போன்றவை இடம்பெறும் என்று தெரியவருகின்றது.

இந்த வைத்தியசாலையின் பணிகள் பற்றி விளக்குகையில்: மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் பிரதி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இ.சிவசங்கர் பின்வரும் விவரங்களைத் தெரிவித்தார்.

சுகாதாரம், கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் நாடு மிக பின்தங்கியிருந்த காலம் அது. அதிக அளவில் மக்களை நோய்வாய்படுத்திக் கொண்டிருந்த காலத்தில் மருத்துவ வசதியின் தேவை உணரப்பட்டும் மக்கள் அதனைப் பெறமுடியாமலும் அரசாங்கம் அதனை வழங்க முடியாமலும் அல்லற்பட்ட அந்தக் காலப் பகுதியில் கூட்டுறவு முறையில் ஒரு வைத்திய சாலையை உருவாக்கும் ஒரு துணிகரச் செயலை நிறுவுநர்கள் 1935 - 1936 ஆண்டு காலப் பகுதிகளில் வெற்றிகரமாக செய்து முடித்தனர்.

### தென்கிழக்காசியாவில்

தென்கிழக்காசியாவிலேயே முதன் முதலில் கூட்டுறவு முறையில் உருவாக்கப்பட்ட இவ்வைத்தியசாலை கூட்டுறவு இயக்கத் திற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகக் கருதப்படுகின்றது. மிகக் குறுகிய காலத்தில் பாரிய வளர்ச்சியை பெற்றுக் கொண்ட இவ்வைத்தியசாலை சமூகத்தில் தனக் கென்று ஒரு காத்திரமான இடத்தைப் பெற்றுக்கொண்டது. இதன் சேவையை இப்பிரதேச மக்கள் மட்டுமல்லாது ஏனைய பிரதேச மக்களும் பெற்று நன்மை அடைந்தனர். இது 1953ஆம் ஆண்டில் இலங்கையின் அப்போதைய ஆளுநராக இருந்த சோல்பெரி பிரபு இவ்வைத்திய சாலைச் சமூகத்துக்கு ஆற்றிவந்த பணிகளை வெகுவாகப் புகழ்ந்து செய்தி அனுப்பியிருந்தார்.

### சூழ்நிலையால் நலிவுற்றது

1953ஆம் ஆண்டு நிறுவுநர் நாளை கொண்டாடும் போது இவ்வைத்திய சாலை 4 வைத்தியர்கள் 24 தாதியர்கள் உட்பட 81 ஊழியர்களை கொண்டதாக விளங்கியது. அக்காலப்பகுதியில் இவ் வைத்தியசாலையில் 42,246 வெளி நோயாளர்களும் 3,722 உள்ளக நோயாளர்களும் சிகிச்சை பெற்றிருந்தனர். அத்துடன் 1,127 சத்திரசிகிச்சைகளும் 370 பிரசவங்களும் நடைபெற்றிருந்தன. மிகப் பெருமளவு எழுச்சி கண்டு சாதனை படைத்திருந்த இவ் வைத்தியசாலை நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையில் சிக்குண்டு படிப்படியாக நலிவு பெறத் தொடங்கியது.

### தற்போது கிடைக்கும் சேவைகள்

எனினும் இவ்வைத்தியசாலையின் தேவையினையும் அது பிரதேசத்தில் ஆற்ற வேண்டிய பங்கினையும் உணர்ந்து கொண்ட அறிஞர்கள் இவ்வைத்திய சாலைக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியில் ஈடுபட்டு குறிப்பிடத் தக்களவு வெற்றியினையும் பெற்று வருகின்றனர். இதற்கு இவ்வைத்தி சாலையின் பணிப்பாளர் சபையினரதும் ஊழியர்களினதும் அயராத கடின உழைப்பும் புலம்பெயர்ந்தும் எம் நினைவுகளை சுமந்து வாழும் உறவுகளின் உதவிகளும் இப்பிரதேச மக்களின் ஒத்துழைப்பும் இப் பணியைச் செய்ய உறுதுணையாக இருந்து வரு கின்றது.

தற்போது வைத்தியசாலையில்

- 24 மணி நேர உள்ளக வெளியக வைத்தியசேவை
- இலவச நீரிழிவு சிகிச்சை பிரிவு
- இலவச வைத்திய ஆலோசனையுடன்கூடிய குடும்ப வைத்தியத்துறை
- ஆய்வுகூட வசதி
- வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளும் சிகிச் சைகளும்
- சத்திரசிகிச்சை வசதி
- பல் வைத்தியப் பிரிவு
- X- கதிர், E.T.T ஸ்கானர் வசதிகள்
- 24 மணி நேர அம்புலன்ஸ் சேவை

போன்ற சேவைகள் கிடைக்கின்றன.

பிரதேச மக்களின் நலனில் தன்னுடைய காத்திரமான பங்கினை உணர்ந்து இவ்வைத்தியசாலை மேலும் தன் சேவைகளை விரிவாக்க திட்டமிட்டுள்ளது. அதன் பிரகாரமே இப்போது நடமாடும் வைத்திய சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இங்கு இனங்காணப்படும் நோயாளிகளுக்கு தொடர் சிகிச்சையும் கண்காணிப்பும் வைத்தியசாலையில் அளிக்கக்கூடியவாறு இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவிருக்கின்றது.

மக்களுக்கு சேவைசெய்வதற்காக கூட்டுறவு முறையில் அமைந்த இவ் வைத்தியசாலை பல்வேறு இடர்களையும் தடைகளையும் தாண்டி தன் வரலாற்றுப் பணியில் தொடர் கின்றது என்று டாக்டர் சிவசங்கர் குறிப்பிட்டுள்ளார். (ப)

## நாளை

| | |
|---|---|
| மாசி - 04 | 16.02.2008 |
| | சனிக்கிழமை |
| திதி : தசமி | பிற்பகல் 04.24 |
| நட்சத்திரம் : | மிருகசீரிடம் |
| | முன்னிரவு 10.52 |
| சுபநேரம்: | 03.33-05.03 |
| ராகுகாலம்: | 09.33-11.03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

கடந்த(08.02.2008) வெள்ளிக்கிழமை காலமான எனது அன்புக் கணவர்

**அமரர் ரோகான் இராஜசிங்கம்**

(முன்னாள் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி)



அவர்களின் துயரச் செய்திகேட்டு இந்தியாவில் எனது இல்லத்துக்கு வருகை தந்து ஆறுதல் தெரிவித்து, இறுதி ஆராதனையில் பங்கேற்ற குருக்கள் உட்பட அனைத்து அன்புள்ளங்களுக்கும் யாழ். நகரில் எனது மாமனார் ஞா. அருளானந்தம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற இரங்கல் வழிபாட்டில் கலந்து செபித்த உற்றார், உறவினர்களுக்கும், விளையாட்டு ஆர்வாலருக்கும், அபிமானிகள், விளையாட்டுத்துறை அதிகாரிகள் மற்றும் தொலைபேசி , ஊடகங்கள் ஊடாக அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எனது நெஞ்சாழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவிப்பதோடு அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்படி வேண்டிநிற்கின்றேன்.

*பிரிவால் துயருறும்:*

*315, பாங்சால் வீதி,*
*யாழ்ப்பாணம்*

திருமதி மொய்றா வினோதினி இராஜசிங்கம் *(மனைவி).*

*(71142)*

## கண்ணீர் அஞ்சலி



... அலுவலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தம்பித்துரை ஜெயசீலன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர்**
**மாதர்**
**தம்பித்துரை**

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகர், கோப்பாய். *(71145)*

பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும் நலன்புரிச் சங்கம்.

## இடம் பெயர்ந்தவர்களுக்கான உதவித் திட்டம் வழங்கல்

'சொண்ட்' அரசார்பற்ற நிறுவனத்தால் சீ.எச்.ஏ நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெயர்ந்து வாழும் குடும்பங் களைத் தெரிவுசெய்து அவர்களின் சுய தொழிலை மேம் படுத்தும் வகையில் சுய தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று வெள் ளிக்கிழமைமுப 10மணிக்கு சொண்ட் நிறுவன அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நல்லூர் பிரதேச செயலகத் உதவித் திட்டப் பணிப்பாளர், மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசகிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு இவர்களுக்கான உபகரணங்களை வழங்கவுள்ளனர். மேலும் ஒவ்வொரு பயனாளிக்கும் ரூபா பத்தாயிரம் பெறுமதியான சுய தொழில் உபகரணங்கள் வழங்கப்படும்

## தவறிவிட்டது

வேலுப்பிள்ளை இராமலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், விஷேட இராணுவ அடையாள அட்டையும் தும்பளை வீதியில் 08.02.2008 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறை தபால்கந்தோரில் கொடுத்து உதவும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்.

கோயில் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை. **வே.இராமலிங்கம்.**

## மாதகல் புனித லூர்து அன்னை திருவிழா-17.02.2008

(கடற்கரையில் அமைந்துள்ளது)

16.02.2008 பிற்பகல் 3.30 மணிக்கு நற்கருணை விழா
17.02.2008 காலை 7.30 மணிக்கு திருவிழா திருப்பலி

விஷேச குறிப்பு:
வாகனங்களோ, கைப் பைகளோ, கமரா, கைதொலை பேசியோ போன்றவைகள் உள்ளே எடுத்துச் செல்ல அனுமதியில்லை.

புனித லூர்து அன்னை ஆலயம்,
மாதகல். (71143)

**பங்குத்தந்தை.**

## மரண அறிவித்தல்

### *கந்தையா பாலசிங்கம் (கப்பல்)*



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் 12.02.2008 செவ்வாய்க்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் வள்ளிநாயகி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கந்தையா- இராசம்மா தம்பதியரின் மருமகனும், நவரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், நிலாந்தன், தக்சன், ரஜீவனின் பாசமிகு தந்தையும், பரிபூரணம், அருந்தவநாதன், யோகநாதன், யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், தவரஞ்சிதம், தில்லைநாதன், காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் மைதிலி, ஸ்ரீகாந்தராஜா ஆகியோரின் மைத்துனரும், சபேசன், உமாந்தினி, உஷாந்தினி ஆகியோரின் சித்தப்பாவும், கிளி, சிவநேசன், பிரமியா, அனோஜ், அரன்ராஜ், அட்ஷயன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2008) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கேணிக்கரை,*
*பிள்ளையார் வீதி,*
*அளவெட்டி.*
கனடா - தொ.பே.: 001 9052949651

தகவல்:
**தில்லைநாதன்** *(மைத்துனர்),*
**க.அருந்தவநாதன்** *(அண்ணை).*

*(71142)*


Direct Start

புதிய கொம்பியூட்டர் டிப்ளோமா பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

Registered with Ministry of Tertiary & Vocationl Education

COMPUTER TRAINING COURSES

Diploma in MS Office XP (DMO)
Diploma in WEB Design (DWD)
Diploma in Desktop Publishing (DTP)
Certificate in Information Technology (CIT)



Diploma in COMPUTERISED ACCOUNTING

Quick Books Premier- 2004

QuickBooks


இலவச பாட நூல்கள்

Duration: 3 months

ASIAN COMPUTER EDUCATION

✔ இல. 2 G ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021-222 5677
✔ கொடிகாமம் வீதி, நெல்லியடி. (மாலுசந்தி பிள்ளையார் கோவில் முன்பாக) ☎ 077-3122198


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



## வீரகத்திப்பிள்ளை இராஜரட்ணம் சந்திரசேகரம்

(குட்டி மாஸ்ரர்- தொண்டைமானாறு)

கடந்த 16ஆம் திகதி இறைவனடி சேர்ந்த எமது குடும்ப தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ம... பூர்வ மான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (15.02.2008) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும் மதியபோசனத்திலும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் அபிஷேக மகேஸ்வர பூசையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம். London ஆச்வே முருகன் ஆலயத்திலும் கனடா செல்வச்சந்நிதி ஆலயத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, பஜனைகள் நடைபெறும்.

**மனைவி ச.மங்கையர்க்கரசி**
**T.P.:0779591300**
**சகோதரன் R.சண்முகலிங்கம்,**
**சகோதரி R.சடாட்சரதேவி (குந்தவை).**
**ஸ்ரீரஞ்சினி புவனேந்திரன் ஐயர் (கனடா),**
**0019055661718**
**நந்தகுமாரன் (மகன்), 0044208422581** } U.K.
**செந்தில்நாதன் (மகன்) 00442088641009** } U.K.

தோற்றம்
04.04.1925

மறைவு
...01.2008

**பிரதான வீதி, தொண்டைமானாறு.**

(71147)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டுக்கோட்டையில் இலவச மருத்துவ முகாம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையும் IMHO (USA) நிறுவனமும் இணைந்து வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலய அனுசரணையுடன் நடத்தும் இலவச மருத்துவ முகாம்

இடம் : கார்த்திகேய வித்தியாலயம்.
(மூளாய் வீதி, வட்டுக்கோட்டை)

காலம் : நாளை (16.02.2008) சனிக்கிழமை

நேரம் : காலை 8.30 முதல் பிற்பகல் 12.30 மணி வரை.

குறிப்பு: நீரிழிவு நோய் பரிசோதனைக்கு 8 மணித்தியாலத்துக்கு முன்பிருந்து சாப்பிடாது வரவும்.

அனைவரும் வந்து பயன்பெறுமாறு அழைக்கின்றோம்.

(A) - ஏற்பாட்டாளர்கள்.

## 17ஆவது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**புவனேஸ்வரி அரியராசா B.A**

மலர்வு 30.09.1941 — உதிர்வு 14.02.1991

பதின் ஏழு ஆண்டு போனாலும்
ஆறவில்லை எம் துயரம்
அகிலத்தில் ஆறாத்துயரில் எம்மை
ஆழ்த்திவிட்டு மறைந்தாலும்
இந்நாளில் அல்ல எந்நாளும் மறவோம்
மறவோம் மறவோமே.

என்றும் உங்கள் நினைவுடன்
கணவன், மகன்
(லண்டன்),
உறவினர்கள்.

தாவடி தெற்கு,
கொக்குவில் (71152)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியரான சி.சிவானந்தன் அவர்களின் பாசமிகு தந்தை

**சின்னன் சின்னத்தம்பி**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/போக்கட்டி அ.த.க. பாடசாலை, கொடிகாமம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை பழைய மாணவர் சங்கம்.
(#/551475)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன ஆசிரியர் திரு. இ.மதிகரன் அவர்களின் சகோதரன்

**அமரர் இராசலிங்கம் மதிமாறன்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

The Express Institute
Irupalai, Kopay.

அதிபர், ஆசிரியர்கள்,
ஆளணியினர்,
மாணவர்கள்
(#/551473)

## கண்ணீர் அஞ்சலி



அரியாலையூர் பெருமகன்

**செல்லையா அருளம்பலம்**

(முன்னாள் கணக்காளர், யாழ்ப்பாண கூட்டுறவுச் சங்கம்)

அரியாலை பனை, தென்னை வள அபி விருத்திச் சங்கத்தின் தலைவராக, அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக, அரியாலை சித்திவிநாயகர் தேவஸ்தான நிர்வாகத்தின் செயலாளராக, யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயற்குழு உறுப்பினராக சேவையாற்றியதோடு அரியாலையூரின் கலைத்துறை வளர்ச்சிக்காக தன்னை ஈடுபடுத்தி நடிகராகவும் விளங்கியவரும் பொது மக்களுடன் இயற்கையாகவே சமுகமாக உறவுகளைக் கொண்டிருந்தவருமான செ.அருளம்பலம் அவர்களின் மறைவையொட்டி அரியாலை மக்கள் சார்பில் கண்ணீர் அஞ்சலியைச்,செலுத்துகின்றோம்.

(71160) - அரியாலையூர் நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தி

(ஓய்வுபெற்ற முகாமையாளர், அளவெட்டி - மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் )

அளவெட்டி வடக்கு, முருகடியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு, மதவடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தி நேற்று (14.02.2008) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மாவின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - விசாலாட்சியின் அன்பு மருமகனும் சோதிமலரின் (கலா) அன்புக் கணவரும், மயூரன், நிரூஜன் (A/L2008), சுகனியா (O/L, மல்லாகம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2008) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயாணத்திற்கு எடுத்துச் செல்லப்படும்,

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்

தகவல்:
(A) மனைவி, பிள்ளைகள்.

## காரைநகரில் இன்று மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலத்தில் கல்வி பயின்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்திய பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா, இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய நடராசா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கா.குமாரவேலு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக காரைநகர் வைத்தியசாலை பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் சந்தன ஜெயசேகர கலந்துகொள்வார். (1-205)

## தென்மராட்சியில் நாளை கருத்தரங்கு

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்பில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இதில் தரம் 11 நாடகமும் அரங்கியலும் மாணவர்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

கலாநிதி ம.குழந்தை சண்முகலிங்கம் கருத்தரங்கை நடத்தவுள்ளார். (1-203)

## விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர்ந்தன

நல்லூர்,பெப்.15

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

வலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு கல்வித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (1-111)

## சைவ சமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.15

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடாந்தம் நடத்தும் சைவ சமய அறிவுப் பரீட்சை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கென யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, நயினாதீவு மகாவித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம், அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி, கோப்பாய் நாவலர் தமிழ்க்கலவன் வித்தியாலயம், வேலணை மத்திய கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி ஆகிய 15 பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையில் நடைபெறும் இப்பரீட்சைக்கு சுமார் 3200 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கழகத்தின் பரீட்சைச் செயலாளர் சு.சிறீகாந்தன் தெரிவித்தார். (அ)


## மணமகள் தேவை

இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள்.

1974 M.B.B.S. Doctor, 1973 B.A. மாஸ்ரர், 1977 B.Sc. ,1976 ஆஸ்திரேலியா மணமகன்களுக்கு மணமகள்கள் தேவை.

வெளிநாடு, உள்ளூர் சாதகங்கள் இருக்கின்றன.

கிருஷ்ணா திருமண சேவை
T.சுப்பையா, செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 9032

## BARATHY சித்தன்கேணி

**பெற்றோர்களுக்கு ஒரு நற்செய்தி!**

உங்கள் பிள்ளைகளுக்கு எங்கும்
கிடைக்காத ஒரு வரப்பிரசாதம்
சிறந்த வழிகாட்டலில்
தரம் 6, 7, 8
விஞ்ஞானம் - திரு. தேவா

எமது நிலையத்தில் மட்டும்தான் ஆசிரியரின் வகுப்பு. இன்று முதல் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆசிரியரின் வகுப்பு நாள்கள்.
தரம் 6, 7, 8 - திங்கள், வெள்ளி
9, 10, 11 - சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும்.

குறிப்பு : சகல வகுப்புகளுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது
அனுமதிகளுக்கு முந்துங்கள்


## மரண அறிவித்தல்கள்

### சேனாதிராசா தேவராசா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் புத்தூர், [illegible]தடியை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதி[illegible] தேவராசா நேற்று (14.02.2008) வியாழக்[illegible]மை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சீவரத்தினம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற ஜெகராசா மற்றும் சிவமூர்த்தி, தங்கராணி ஆகியோரின் தகப்பனா[illegible] சிவஞானேஸ்வரி, புனிதவதி, காலஞ்சென்ற சிவஞானசிங்கரா[illegible] (கொக்குவில்) ஆகியோரின் மாமனாரும் சிவராமகிருஷ்ணன், சிவஞானவதி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.02.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் மேற்கு கிந்துசிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரவாசா, புத்தூர் கிழக்கு,
புத்தூர். (71155)

தகவல்:
தே.சிவமூர்த்தி
(மகன்)

### பகீரதன் பிறேம் (Pibon)



தாய்லாந்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட Pibon (பிறேம்) 13.02.2008 புதன்கிழமை தாய்லாந்தில் அகாலமரணமானார்.

அன்னார் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சிதம்பரநாதன் பகீரதன் - தாய்லாந்து சிறிவன் (Sriwan) தம்பதியரின் மகனும் ஷனாக்காவின் அன்புச் சகோதரனும் ரஜனி - இராஜேந்திரன், ரதினி - விஜேகுமார்(லண்டன்), ரமணி - சுதர்சன்(லண்டன்) ஆகியோரின் மருமகனும் சுகீ - சர்மிலா(லண்டன்), ரகு - பாமினி (லண்டன்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தாய்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லூர், யாழ்ப்பாணம்.
Thailand 0066813437649 (71181)

தகவல்:
ரஜனி - ராஜேந்திரன்
குடும்பத்தினர் (அத்தை)

### இராசலிங்கம் மதிமாறன்

(வருமான வரி உத்தியோகத்தர், பிரதேச சபை, நல்லூர்)



கோண்டாவில் கிழக்கு, நாராயணா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் மதிமாறன் நேற்று (14.02.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசலிங்கம் - பவானி தம்பதியினரின் அன்பு மகனும் மதிவதன், மதிசுதன் (பிரான்ஸ்), மதிமோகனா, மதிவிஜிதா, மதிகரன், மதிவர்ணன், தேவகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தசோந்திரன் (கமநல அபிவிருத்தித் திணைக்களம்) அவர்களின் அன்பு மைத்துனரும் பிறேமாகுமார் (ஹொலண்ட்), பிறேமசுதா (லண்டன்), பிறேமலதா, றமாலினி ஆகியோரின் உடன் பிறவாத சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிச்கிரியைகள் இன்று (15.02.2008) வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டைக்காட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ நாராயணா வீதி,
கோண்டாவில் கிழக்கு.
தொ.பே.: 0776910551 (A)

தகவல்:-
மு.இராசலிங்கம் (தந்தை),
ச.தசோந்திரன் (மைத்துனர் -
கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
நல்லூர், யாழ்ப்பாணம்)

### திருமதி பூபாலசிங்கம் கண்மணி



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூபாலசிங்கம் கண்மணி நேற்று (14.02.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - பாக்கியம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிமுத்து ஆகியோரின் மருமகளும் செல்வரத்தினம், மலர்மணி, தவமணி, காலஞ்சென்ற நடேசலிங்கம் மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கெங்காதேவி மற்றும் தர்மபாலன், கிருஷ்ணபாலன் (கனடா), ஞானதேவி, இரகுபாலன் (இத்தாலி), தர்மதேவி (ஆசிரியை, வசாவிளான் ம.ம.வி.), மல்லிகா தேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் மற்றும் இராஜேஸ்வரி, இரஞ்சிதகுமாரி (கனடா), வெற்றிவேலாயுதம், பாலஸ்ரீ (இத்தாலி), மனோகரன் (சிவசத்தி ஸ்ரோர்ஸ், உரும்பிராய்), இரவீந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஸ்ரீஜாந்தி, ஜெகதீஸ்வரன் (கனடா), சுயத்தி, சிவகுமார் (வசாவிளான் ம.ம.வி.), காலஞ்சென்ற நிஷாந்தி மற்றும் ஜீவானந்தன் (கனடா), சிரோஷன், அனாத்திகா (கனடா), காலஞ்சென்ற லக்ஷினி மற்றும் தர்ஷன், துஷ்யந்தினி, சுதர்சன், நிதர்ஷன், தர்ஷிகா, கௌசிகன், விதூரஷன், டக்ஷன், ரதீஷன், விதூரஷன், மலரவன், சந்துரு, கௌரீஷன், கவிமாறன், இராகுலன், கார்த்திகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சந்தியா, சப்றீனா, கீர்த்திகா, பிரதீபன், மதுஷனா, திவ்யன்,தூயோன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகையகள் இன்று (15.02.2008) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் வீதி, உருப்பிராய் சந்தியிலுள்ள இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் வேம்பன் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் சந்தி. (A)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் செலவின உயர்வுக்கு எதிராக அடுத்த மாதம் முதல் பெரும் நடவடிக்கை!

## சுவரொட்டிப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்து ரணில் அறிவிப்பு

கொழும்பு,பெப்.15

எகிறி வரும் வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு இந்த மாதத்திற்குள் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறுமானால் அடுத்த மாதம் அரசிற்கு எதிராகப் பாரிய நடவடிக்கையில் இறங்கவேண்டிவரும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்தக் கோரி ஐ.தே.கட்சியால் நாடு முழுவதிலும் நடத்தப்பட்ட சுவரொட்டிப் பிரசாரப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் நாடு முழுவதிலும் ஆரம்பமானது.

இந்தப் போராட்டத்தை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கொழும்பு மருதானையில் தொடக்கி வைத்தார்.

அப்போது கருத்துக் கூறிய அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் விலைவாசி, வரலாற்றில் என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளது. மக்கள் வாழ முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதிலுக்கு அதை மென்மேலும் அது உயர்த்திக் கொண்டே போகிறது.

யுத்தம் ஒன்றைக் காரணங்காட்டியே பொருள்களின் விலைகளை அரசு உயர்த்தி வருகிறது.

அரசின் இந்த நடவடிக்கையை ஏற்க முடியாது. நாட்டு மக்கள் விலைவாசி உயர்வால் படும் துன்பத்தை நாம் நன்கு அறிவோம். அரசோ பாராமுகமாகவுள்ளது.

இந்த மாதத்திற்குள் வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். இல்லையேல் அடுத்த மாதம் அரசிற்கு எதிராகப் பாரிய நடவடிக்கைகளை முன்கொண்டுசெல்ல நேரிடும் - என்றார் அவர்.(சி)

## திருநெல்வேலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் வருமானவரி உத்தியோகத்தராக பணியாற்றி வந்தவர்.

திருநெல்வேலிக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இவருடன் மொத்தம் ஆறுபேர் மரணமாகியுள்ளனர். (அ-1-78-49)

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசால் முன்வைக்கப்பட்டிருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசு மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

அத்தீர்வு யோசனையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களில் ஒன்றுதான் வடக்கில் இடைக்காலசபையை நிறுவுவது. இந்தச் சபையே ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகின்ற அமைப்பாக இருக்கும்.

இந்த இடைக்கால சபையை நிறுவுவதற்கும் அதற்கான பிரதிநிதிகளை நியமிப்பதற்கும் அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

இடைக்கால சபையை நிறுவும் அதே வேளை வடக்கிற்கும் ஆளுநர் ஒருவரை நியமிப்பதற்கும் அரசு தீர்மானமெடுத்துள்ளது. இந்த இரண்டு விடயங்களும் சமகாலத்தில் இடம்பெறலாம்.

யாரை ஆளுநராக நியமிப்பது என்ற இறுதி முடிவுக்கு அரசு இன்னும் வரவில்லை. அது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

அடுத்தவாரம் இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இடைக்கால நிர்வாக சபையை நிறுவுவது பற்றியும் அதற்கான பிரதிநிதிகளை நியமிப்பது பற்றியும் அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படும்.

வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும்வரை இச்சபை இயங்கும் - என்றார் அவர். (சி)

## இலங்கைக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன அரசின் சார்பில் இந்தக் கருத்தை வெளியிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை அரசு முன்கொண்டு செல்லும் யுத்த நடவடிக்கைகளை மிக மோசமாக விமர்சித்து இலங்கைக்கு

வழங்கப்பட்டுவரும் நிதி உதவிகளை நிறுத்த சர்வதேச நாடுகள் முடிவெடுத்துள்ளன என்று பொய்ப் பிரசாரம் செய்யப்படுகின்றது.

### பயங்கரவாத ஒழிப்பை சர்வதேசம் ஏற்றுள்ளது

பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பான எமது நடவடிக்கைகளையும் சமாதான முன்னெடுப்புகளையும் சர்வதேச நாடுகள் ஏற்றுள்ளன.

அயல்நாடான இந்தியாவும் எமது சமாதான செயற்பாட்டை ஏற்று, அதற்கு முழுமையான ஆதரவை வழங்கிவருகின்றது.

ஜப்பான் தொடர்ந்து நிதி உதவிகளை வழங்கி வருகின்றது. தற்போது பாரிய மூன்று வேலைத் திட்டங்களுக்கு அந்நாடு எமக்கு நிதியை வழங்கியுள்ளது. அந்நாட்டின் உதவி என்றும் தொடரும்.

ஜேர்மன் தான் வழங்கிவரும் நிதி உதவியை நிறுத்தப்போகின்றது என்று இங்கு பொய்ப் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. ஜேர்மனைச் சேர்ந்த யாரோ ஒருவர் இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் நிதி உதவிகளை நிறுத்தவேண்டும் என்று ஆலோசனை கூறினால் அது அந்த நாட்டின் தீர்மானமாகிவிடாது.

அவ்வாறு நிறுத்துவதாக இருந்தால் அந்நாடு உத்தியோகபூர்வமாக எமக்கு அறிவிக்கும். ஆனால், அப்படியானதொரு அறிவிப்பை அந்நாடு விடுக்கவில்லை.

ஜேர்மன் எமக்கு வழங்கிவரும் நிதி உதவி நிறுத்தப்படும் என்று கூறப்படுவதில் எந்த உண்மையுமில்லை. - என்றார் அவர். (சி)

## புலிகளை எதிர்கொள்ள...

(முதலாம் பக்கத்-தொடர்ச்சி)

இந்து சமுத்திர பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளின் பாதுகாப்புச் சவால்களுக்கு தீர்வுகாண்பதற்கும் கடல் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் இத்தகைய மாநாடுகள் முக்கியமானவை என்றும் வசந்த கரணாகொட குறிப்பிட்டுள்ளார்.

### சேது சமுத்திரத் திட்டத்தினால் இலங்கை, இந்தியாவுக்கு பாதுகாப்பு

சேது சமுத்திரத்திட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் அதனால் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் எதுவும் ஏற்படாது என்றும் - இலங்கை கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தத் திட்டம் இந்திய - இலங்கை கடற்பகுதிகளை சிறப்பாக கண்காணிக்கவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் உதவுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### பிராந்திய நாடுகளின் கடற்படை ஒத்துழைப்பைக் கோருகிறார் மன்மோகன் சிங்

இதேவேளை -

முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளின் கடற்படைத் தளபதிகள் கலந்துகொண்ட இந்து சமுத்திர கடற்படை மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றியஇந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் கடற்படையினரின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளார்.

பயங்கரவாதம், போதைப்பொருள் மற்றும் ஆயுதக்கடத்தல், கடற்கொள்ளை போன்றவை கடல் வர்த்தகத்திற்கு மாத்திரமின்றி அப்பாவி மீனவர்களுக்கும் உல்லாசப் பயணிகளுக்கும் ஆபத்தானவையாக மாறியுள்ளன என இந்தியப் பிரதமர் அங்கு தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தின் கடற்பாதைகள் உலகின் முக்கிய தொடர்பாடல் மார்க்கங்களாகவும் மாறியுள்ளன. கொழும்பு, மும்பாய், மலேசியா போன்ற துறைமுகங்களில் ஏற்றியிறக்கப்படும் கொள்கலன்களின் அளவு பல மடங்குகளாக அதிகரித்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, ஸ்திரத்தன்மையும், அமைதியும் நிலவும் இந்துசமுத்திரம் குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளது. நாடுகளின் கடற்பகுதிகளைப் பாதுகாக்க உதவுவதற்கு அது தயார் - என்றும் இந்திய பிரதமர் அங்கு தெரிவித்தார். (அ-சி)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக்கைத்தீவில் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பினால் அமைக்கப்பட்ட 25 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை இடம்பெறுகின்றது. அதில் கலந்து கொள்ளும் நீல்போணி அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடுவார்.

அதன் பின்னர் வட்டுக்கோட்டை கோட்டைக் காட்டில் அமைக்கப்பட்ட வீதியைத் திறந்துவைப்பார்.

ஐ.நாவின் அலுவலகத்தில் பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும் ஏற்பாடாகியுள்ளது. (அ-1)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்து இப்பகுதியில் வசித்து வந்த மக்களின் குடியிருப்புகள் மீதே நேற்றுக் காலை விமானங்கள் இரு தடவைகள் தாக்குதல்களை நடத்தியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் க.முத்துச்சாமி (வயது 78), பே.அங்கப்பன்(வயது53) ஆகியோரும் மற்றொருவரும் காயமடைந்தனர்.

### 'ராதா பேஸ்' மீதே தாக்குதல்

இதேவேளை -

முல்லைத்தீவில் விசுவமடுக் குளத்துக்கு வட கிழக்கே அமைந்திருந்த 'ராதா பேஸ்' என்ற விடுதலைப் புலிகளின் தளத்தை இலங்கை விமானப்படையினர் நேற்று வியாழக்கிழமை தாக்கியுள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

'ஜெட்' விமானங்கள் மூலம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் இலக்கை நோக்கி மேற்கொள்ளப்பட்டதை விமான ஓட்டிகள் உறுதி செய்துள்ளார்கள் என்றும் -

இந்தத் தாக்குதலால் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் - ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது. (அ-2)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர்கள் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவறுடன் தொழிற்சங்க மற்றும் சிவில் சமூகம் அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்களும் ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

இந்தக் குழுவினர் ஊடக அடக்குமுறைக்கு எதிரான கோஷங்களை எழுப்பியபடி சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணமும் கொழும்பு, யூனியன்பிளேசினூடாகச் சென்று, பின்னர் கொழும்பு, நகர மண்டபத்திற்கு முன்னால் உள்ள ஜே.ஆர். ஜெயவர்த்தன நிலையம் வரை பாதயாத்திரையாகச் சென்றனர். இவர்களுடன் கலகம் அடக்கும் பொலிஸாரும் கூடச் சென்றனர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனபுரத்தில் ஊர்வலம் முடிவுற்றது, அங்கு பொதுக்கூட்டம் ஒன்று இடம்பெற்றது. மாலை 5 மணிவரை இடம்பெற்ற இந்நிகழ்வில் சுதந்திர ஊடக இயகத்கத்தின் தலைவர் கனத்த தேசப்பிரிய, உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் சனத்பாலசூரிய ஆகியோர் உட்பட மற்றும் பல பிரதிநிதிகள் உரையாற்றினார்கள். (சி)

## ...எட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இவ்விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எதிராகத் தாங்கள் எந்த வாதங்களையும் சமர்ப்பிக்க விரும்பவில்லை என மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி தெரிவித்திருப்பதால், இவ்விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எதிராக எதுவித உத்தரவுகளும் பிறப்பிக்கப்படவில்லை'' - இவ்வாறு நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்தது.

சிரேஷ்ட சட்டத்தரணிகள் பாயிஸ் முஸ்தபா, கே.ஸி. வெலியமுனை ஆகியோர் மனுதாரர் சார்பில் ஆஜராகினர். (சி)


**aat (Sri lanka)**

ஆரம்பம்

ஞாயிறு : 3:00 மணி

கணக்கீடு: D.Sam

DMI

154 A, நாவலர் வீதி (நாவலர் வீதி, பிறவுண் வீதிச் சந்தி), யாழ்ப்பாணம்.

நாளை முதல் கிளை நிறுவனத்தில்

இந்துநாகரிகம்

ஜோதீஸ்வரன்

DMI

154 A, நாவலர் வீதி (நாவலர் வீதி, பிறவுண் வீதிச் சந்தி), யாழ்ப்பாணம்.



**Softview Computer College**


55, Arasady Rd, Jaffna.

Dip. In AutoCAD
Dip. In Internet E-mail
Dip. In Microsoft Office
Dip. In Desktop Publishing
Dip. In Hardware Engineering
Dip. In Computerized Accounting
Computer Typing(Tamil&English)

Start on:16.20.02.2008

10.00am, 3.00pm


# OBITUARY



**Rajaratnam Sabaratnam Samuel**

Retired Project Manager C.D.E., Cont. Prog. Manager Caritas – Hudec, Jaffna, Attached to Shakkane Eng (Pvt) Ltd. Negombo as Project Manager passed away on 14.02.2008. The youngest son of late Sabaratnam and Pathinipillai, Beloved husband of Thevapushpam Rajaratnam, Formar Principal (Chundikuli Girls College, Jaffna). presently Principal Humedica International School, Manipay. Loving father of Sujieva and father – in – law of Vithyashangar and affectionate grand father of Samuel and Shemuel. Beloved brother of late Gunaratnam, Pushpam (Malaysia), late Ariyaratnam, Sugirtham (London), Thevy (London), Sornam (Vavuniya), Pavalam (Colombo).

The remains will be at 8 A 1/1, Station Road, Wellawatte on Friday 15th From 8 am to 8 pm and thereafter will be at Jayaratne funeral Parlour, Borella From Saturday 16th 8am till Sunday. Service at 4 pm followed by burial at kanatte cemetory at 4.30pm.

8A 1/1, Station Road, Wellawatte. Tel: 5750475

**Mrs.T.Rajaratnam**
*Principal*
*Hamedica International*
*School Manipay*

(A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.